# உறவுகள்

சித் | வைகா | ஆனி

uravukal

Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 98

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை




இரக்கம், மன்னிப்பு, பகிர்வு இம்மூன்று பண்புகளும் மனம் மாற்றம் பெற, புனிதத்தில் வளர, முக்கியமானவைகள்.

# உள்ளே.....

இதழ் 98

சித் - வைகா - ஆனி

3 ஆசிரியர் பக்கம்
4 விடுதலைப் பணிகள்.......
5 விக்டோரியா மகாராணிக்கு....
6 நற் சிந்தனை.......
7 தவக்காலம்.......
9 இளையோருக்கு இல்லை......
12 தேவதாயின் மாதம்.....
13 மழலை மஞ்சம்.....
16 பப்பாளியின்.......
17 யாழ்ப்பாணம் சில்லாலை..
18 பழக்கமே வழக்கம்...
23 கலிலேயாவிலிருந்தா?......

**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

மறையாசிரியர்: திரு: ரி. எம்.சந்தியாகு
திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி:வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: லூசியா மேரி
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France
☎: 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org

**வெளியீடு:**

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரானஸ்

**கணினி வடிவமைப்பு:**

உறவுகள் பேப்பர் தயாரிப்பு
**றெஜீனா சிவகுமாரன்**

**31- 05-2026 சார்ட் திருத்தல திருயாத்திரை**

14:30 Cathedrale Notre Dame -18 Cloitre Notre dame - Chartres

**குறுக்கெழுத்து போட்டி 91டின் விடைகளை தயவு செய்து 05-06-2026 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி**

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்



பெல்வில் சிற்றாலயத்தில் நேரம்: 9:00

05 – 04 - 2026
03 - 05 - 2026
07 - 06 - 2026

**சந்தா விபரம்**

தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

# ஆசிரியரிடமிருந்து..........



**உயிர்த்த ஆண்டவரின் நல் வாழ்த்துக்கள்!**

**சாவே, உன் வெற்றி எங்கே?**

**சாவே உன் கொடுக்கு எங்கே?**

பாவமே சாவின் கொடுக்கு. பாவத்துக்கு வலிமை தருவது திருச்சட்டமே. ஆகவே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி!. ஆமென்

எனது அன்பு உறவுகளே!

வேகமாக பயணிக்கும் உலகில் வாழும் நாம், தாயின் கருவில் உருவாகும் முன்னே நம்மை அறிந்து தெரிந்து இவ்வேளை வரை கண்மணி போல் காக்கும் இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எமக்கு வாழ்வின் நிறைவான உண்மைகளை எடுத்து கூறுயுள்ளது. இயேசு எமக்காக அனைத்தையும் ஏற்றுக்கொண்டார். ஆனால் எமது வாழ்க்கை பயணத்தில் வருகின்ற இன்பங்களை மகிழ்வோடு ஏற்கும் நாம் துன்பங்களை ஏற்க மறுக்கின்றோம் அடுத்தவர்கள் மீது பழி சுமத்துகின்றோம். கடவுளைத் திட்டி தீர்க்கின்றோம். உலக காரியங்களில் மாற்றம் ஒன்றே மாறாதது என மாற்றத்தை தேடும் நாம், எம்மையும் நல் நெறியில் மாற்றிக்கொள்ள முயல வேண்டும்.

கிறிஸ்துவின் உயிர்ப்பே எமது கிறிஸ்தவ வாழ்வின் உயிர் ஓட்டம். கிறிஸ்துவின் சாட்சியாக வாழும் நாம் அவரின் விழுமியங்களை இறை நம்பிக்கையுடன் பின்பற்ற வேண்டும். உலகில் பல்வேறுபட்ட திசைகளிலும் போர், விபத்து, கொலை, களவு, பலதரப்பட்ட நோய்கள், விலை உயர்வு, பொருளாதார தடை, காலநிலை மாற்றம் என பல்வேறு துன்பங்களை காண்கிறோம்.

எனவே இறைவனிடம் ஒப்புக் கொடுத்து மண்றாடுவோம்.

உன்னை போல் உன் அடுத்து இருப்பவரையும் அன்பு செய் என்ற இயேசுவின் மேலான கட்டளையை பின்பற்றி வாழ்வோம். எமது ஆன்மிக பணியகம் முன் எடுக்கும் அனைத்து காரியங்களும் ஒன்று பட்டு நின்று உழைக்கும் உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் தொடர்ந்தும் இணைவோம்! இணைப்போம்!! இறை உறவில் பயணிப்போம்!!!



நீதிமான்களோ என்றென்றும் வாழ்கிறார்கள். அவர்களுக்குரிய கைம்மாறு ஆண்டவரிடம் உள்ளது. அவர்களைப் பற்றிய கவலை உன்னத இறைவனுக்கு உண்டு. அவர்கள் மாட்சிமிக்க பொன்முடியைப் பெறுவார்கள்; ஆண்டவருடைய கையிலிருந்து மணிமுடியைப் பெறுவார்கள். அவர் தம் வலக்கையால் அவர்களை அரவணைப்பார்; தம் புயத்தால் அவர்களைப் பாதுகாப்பார். (சாலமோனின் ஞானம் 5:15,16. )

# விடுதலைப் பணிகள் வெற்றியைத் தருமே!

மறையாசிரியர் தி.ம. சந்தியாகு, வேங்கிடக்குளம் இந்தியா

1. எங்கே இருக்கிறது இறையாட்சி என்று,
எவரேனும் கேட்டால் இதோ பதில் என்பீர்!
சங்கே முழங்கு சரித்திரம் வழங்கு!
சாதனை காட்டி, சாட்சியாய் விளங்கு!
தங்க இளையோர் தங்கும் இடமே,
தலைவர் இயேசு தந்த நல் ஆட்சி !
உங்கள் உதவி உடனே தேவை,
உலகை மாற்ற, உறவைப் போற்ற!

2 . கூடுவோம் ஒன்றாய், கூடுவோம் நன்றாய்,
குணம் தனைக் காட்டி குறைதனைக் கறைவோம்!
பாடுவோம் அன்பாய், பகிர்வோம் நட்பாய்,
பார் இதைக் கண்டு பாராட்டும் அன்றோ!
ஒடுவோம் உடனே ஒருபணி என்றால்,
ஒயோம் அதனை முடிக்கும் வரைக்கும் !
தேடுலோம் எங்கும் திருமகள் இயேசுவின்,
திருப்புகழ் பரப்பும் திருப்பணி தன்னை!

3. குடும்பம் தன்னில் கூடிடும் போது,
கூறுவோம் என்றும் குறையறு வாழ்வை !
இரும்பை எதுவும் எதிர்ப்பட மாட்டா,
இறைவன் துணையில் இணைவோம் இன்றே!
கடும் பணியாற்றும் கவின்மிகு இளையோர்,
கைகள் அவர் களத்திரு அவைக்கு!
விடுமுறை காலத்தில் விரும்பியே செய்யும்,
விடுதலைப் பணிகள் வெற்றியைத் தருமே

4. விவிலியம் மறைக் கல்வி வியன்மிகு வழிபாடு,
விருப்பப் பணிகளாய் விரவி நிற்கின்றனவே !
குவியும் பணிச்சுமைக் குரல்கள் நம்மை!
குறுகிய வெறியில் கூப்பிடக் கண்டோம்!
செவி சாய்த்திடுவோம், சிரமம் கருதோம்,
சிந்தனைச் செம்மல்யாம் சீர்பட உழைப்போம்!
புவியும் போற்றும்! புனிதம் காட்டும் !
புத்திரர் உம்செயல் புதுவாழ் வளிக்கும் !

5. அன்னை மரியா அருகிருந் தூட்டும்,
அழகுச் செம்மொழி ஆறுதல் அளிக்கும்!
தன்னைத் தரும்நல் தகுமறைக் குரும்பம்
தாயின் புகழை தரணிக்குச் சொல்லும்!
உன்னை அழைக்கும் உரிமைத் குரலை,
உவப்புடன் ஏற்று உடனே வருவீர்!
சொன்ன பணியை சுவைபடச் செய்து,
சுடரொளி யாய்நீர் சுகம்பெற்று வாழ்வீர்!

# நற் சிந்தனைகள்

அன்பு ஒன்றே மூடிய கதவுகளை எல்லாம் திறக்கவல்லது. எல்லா தடைகளையும் தகர்த்து எல்லா சுவர்களையும் ஊடுருவிச் செல்லக் கூடியதும் அதுவே. உண்மையான அன்புக்கு நம்முள் ஒரு சிறிதாவது இடமிருந்தால் வெகு அழகான பேச்சைவிட அது எவ்வளவோ நலனை நம்மிடத்தும் பிறரிடத்தும் அளிக்க வல்லது.

**விதைத்ததைத்தான் அறுவடை செய்கிறோம்**

1. ஒவ்வொரு மனிதனும் விதைக்கிறாள். ஒருவன் வாய்ச் சொற்களால் விதைக்கிறான். இன்னொருவன் செயல்களால் விதைக்கிறான்.

2. எல்லா மனிதர்களும் தாங்கள் விதைத்த பண்பு விதைகளுக்கு ஏற்ப கோதுமைப் பயிராகவோ அல்லது களைச் செடியாகவோ வளர்கிறார்கள்.

3. எதைப்பற்றியும் சிந்திக்காமல் விதைத்தவனுக்கு எந்தச் செயல் நிறைவேற்றமும் ஏற்படவில்லை.

4. செயல் நோக்கத்துடன் விதைகளைத் தூவிவிட்டு அதைத் தேடி உண்மையாக உழைத்தவனே "வெற்றி" என்னும் நற்கனிகளைப் பெற்றவனாவன்.

5. பெரும்பாலான மக்கள் வயதான பிறகே தங்களின் வளர்ச்சியின்மை குறித்து அழுது புலம்புகின்றனர்

6. நீங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு எதை விதைத்தீர்களோ அதைத்தான் அறுவடை செய்கிறீர்கள்.

7. நல்லவற்றையே எண்ணி அதற்காக உண்மையில் உழைத்தால் உங்களுக்கு வெற்றி என்னும் அறுவடை சிறப்பாக இருக்கும்.

**சீனப் பழமொழி– பெருந்தன்மையே முதல் படி**

1) இதயத்தில் பெருந்தன்மை இருந்தால், அது, நற்பண்புகளின் அழகாகப் பிரகாசிக்கும்!.

2) நற்பண்புகளில் அழகு இருந்தால், அது இல்லத்தில் இணக்கமுடன் வாழத் தூண்டும்!.

3) இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய்நாட்டில் சட்டத்தை மதிக்கத் தூண்டும்.

## சிரி.....சிரி.....சிரி



போனில்...

"நாங்க உங்க மனைவியை கடத்தி வைச்சுருக்கோம்.. ஐந்து லட்சரூபாய் கொடுத்தா விட்டுடறோம்..."

"ஐந்து என்ன பத்துலட்ச ரூபாயே தரேன்.. ஆனா திருப்பி மட்டும் அனுப்பிடாதீங்க.."

## விக்டோரியா மகாராணிக்கு கத்தோலிக்கச் செபப் புத்தகத்தின் மேல் இருந்த ஆசை



ஐக்கிய இராச்சியத்தின் விக்டோரியா மகாராணியவர்கள் இளவரசியாக இருக்கையில் பிராட்ஸ்டெயர்ஸ் எனப்பட்ட கடற்கரை ஓரத்திலுள்ள ஓர் ஊரில் சிலகாலம் சவுக்கியத்துக்காகப் போய் வசிப்பது வழக்கமாம். அப்படி அவ்விடத்தில் போயிருக்கையில் தம்மைப் படிப்பித்துக் கண் காணித்து வரும் உபாத்திச்சியம்மாளோடு கரடுமுரடான மலைச்சாரலில் உலாவப் போகும்போது அவ்விடத்திலிருக்கும் அர்ச். தேவமாதாவின் கோயிலில் போய் வேண்டிக்கொண்டு திரும்பி அவ்வூர்க் குருவானவரிடத்தில் சிநேகமாய் பேசிவருவதுண்டு. இதனால் அவ்விடத்தை விட்டுப்போன பின்பும் அக்குருவானவருக்குத் தமது நிவாசத்திலிருந்து காகிதமெழுதி சுக சேமங்களை விசாரித்து வருவார்கள்.

இப்படியிருக்கையில் அவர்கள் அந்தக் கோயிலைச் சந்திக்கப்போயிருந்த ஒருமுறை கோவிலில் யாரோ ஒருவர் மறந்து வைத்துப்போன ஓர் செபப் புத்தகம் அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. அப்போது இளவரசி அதையெடுத்துப் பார்த்து அதன்மேல் பிரியங்கொண்டு, தனக்கும் அவ்விதமான ஓர் புத்தகம் தரவேணுமென்று குருவானவரிடத்தில் கேட்டார்கள். அது இங்கிலாந்து தேசக் கிறீஸ்துவர்களுக்குள் சாதாரணமாய் வழங்கி வந்த ஆத்தும உத்தியானம் என்னும் ஓர் சிறு புத்தகமாம். இதனால் குருவானவர் மிகச் சந்தோஷித்து ஓர் புத்தகம் கொடுத்தார்.

மகா ராணியவர்கள் வெகு வந்தனஞ் சொல்லி வாங்கிக்கொண்டு அதிலுள்ள செபங்களைச் சிலநாள் வாசித்து வந்தார்கள். ஆனால் இந்த அரும்பொக்கிஷம் அவர்கள் கையில் வெகுகாலம் நிலைக்கவில்லை. அதெப்படியெனில் அவர்கள் வாசகாலம் முடிந்து லண்டன் நகரத்துக்குத் திரும்பினவுடனே உபாத்திச்சியம்மாள் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு அம்மா நீங்கள் இந்தப் புத்தகத்தை வாசிக்கக்கூடாதென்றாள்.

இதன் கருது என்னவெனில்: இங்கிலாந்து தேசத்து இராயர்கள் பதிதர்களாயிருக்க (அங்கிளிக்கன்) வேண்டுமென்பதும் இராணியவர்கள் கத்தோலிக்கு புத்தகத்தைப் பத்தியாய் வாசித்தால் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களாய்ப் போவார்களென்றும் உபாத்தியம்மாள் கொண்டிருந்த பயமே காரணமாம். ஆகையால் உதவாத போக்குச்சொல்லி புத்தகத்தைக் கொடாமல் ஒளித்துவிட்டாள். பாலிய இராணியவர்களுடைய வேண்டுகோளும் கெஞ்சுதலும் காண்பித்த சலிப்பும், ஆயாசமும் எல்லாம் வீணாய்ப்போயிற்று.

பின்பு வருடங்களும், மாதங்களும், நாட்களும் கடந்துபோயின. எல்லாம் மறந்து போனதுபோல் தோன்றிற்று. ஆகிலும் காரியம் அப்படி முழுதும் மறந்துபோகத் தக்கதல்ல. நல்லது, அதை நினைப்பூட்டும் படியான காலமும் சமீபித்தது. அதெப்படியென்றால் இராணியவர்களுக்குப் பருவமானபோது அவர்களை இங்கிலாந்து தேசத்துக்கு இராக்கினியாகப் பட்டாபிஷகம் செய்தார்கள்.

அச்சமயத்தில் பிராட்ஸ்டெர்ஸ் என்னும் மேற்படி ஊர்க் குருவானவர் இராக்கினியவர்களுக்கு ஓர் மங்களமான காகிதமெழுதி அவர்களை வாழ்த்தினார். அதற்கு இராணியவர்கள் மறு மொழியாகத் தமது கைப்பட ஓர் நேர்த்தியான காகிதமெழுதி அதில் சொல்லிய சிறந்த வாக்கியமாவது:–

**நல்லது நீர் வாழ்த்தியபடி நாம் இப்போது இராக்கினியாயிருக்கிறோம். இப்போது நம்மிடத்தில் நமக்குச் சொந்தமான ஆத்தும உத்தியானம் என்னும் ஓர் புத்தகம் இருக்கிறது. எப்போதாவது அதை ஒருவரும் நம்மிடத்திலிருந்து பறிக்க மாட்டார்களென்று நம்புகிறோம்** என்று எழுதினார்களாம்.

இந்த மகாராணியவர்கள் சிறுவயதில் கத்தோலிக்கு வேதத்தின் மட்டில் காண்பித்த பற்றுதல் இதன்மூலமாகப் புலப்படுகிறது .

## இறைவார்த்தை

**இயேசு:** உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர்: அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர். புதிய மொழிகளைப் பேசுவர். பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர் மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர். (மாற்கு 16:15,17,18)

இதயமே அனைத்திலும் வஞ்சகம் மிக்கது. அதனை நலமாக்க முடியாது. அதனை யார்தான் புரிந்துகொள்வர்? ஆண்டவராகிய நானே இதயச் சிந்தனைகளை ஆய்பவர் உள்ளுணர்வுகளைச் சோதித்து அறிபவர். ஒவ்வொருவரின் வழிகளுக்கும் செயல்களின் விளைவுக்கும் ஏற்றவாறு நடத்துபவர். எரேமியா 17:9,10.

## சிரி.....சிரி.....சிரி



1) வரதட்சனையை வாங்கிட்டு கல்யாணம் செஞ்சது என் மனதை உறுத்திக்கிட்டே இருக்குது....

2) அதனாலே........

1) வரதட்சனையே வாங்காம இன்னொரு கலியாணம் செய்து பிராயச் சித்தம் பண்ணப்போறேன்.......

---

1) தம்பி உங்க பக்கத்து வீட்டுப் பெண் பாமாவை எங்க பையனுக்கு கேட்கலாம் என்று இருக்கோம். பொண்ணு எப்படி?

2) நான் காதலிச்ச வரைக்கும் அந்த பொண்ணு நல்ல பொண்ணு தான் சார்.......




ஒரு சிற்றூருக்கு வெளியே, தனது வயல்வெளிக்கு நடுவே வீடுகட்டி மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார் பெரியவர் ஒருவர். இவர், மனிதர்கள் எந்தளவுக்குப் பேராசை–யோடு இருக்கின்றார்கள் எனத் தெரிந்து கொள்ள விரும்பினார். ஆகவே, இவர் தனது வீட்டிற்கு முன்பு ஒரு பலகையை நட்டுவைத்து, அதில், “மன நிறைவோடு இருப்பவர்களுக்கு இந்த நிலம் சொந்தம்” என்று எழுதி வைத்தார்.

மறுநாள் இந்த அறிவிப்புப் பலகைப் பார்த்துவிட்டு பலரும் வியந்து போனார்கள். அதே நேரத்தில் அவர்கள் தாங்கள் மனநிறைவோடு இல்லை என்பதை உணர்ந்தவர்களாய், ஏமாற்றத்தோடு அங்கிருந்து நகர்ந்து சென்றார்கள்.

சிறிதுநேரம் கழித்து அந்த வழியாக ஒரு பணக்காரர் தனது மகிழுந்தில் வந்தார். அவர் வித்தியாசமான இந்த அறிவிப்பைப் பார்த்ததும், தனது மகிழுந்தை விட்டு இறங்கினார். ‘எனக்கு எல்லா வசதியும் இருக்கின்றது. போதும் போதும் என்ற அளவுக்குச் சொத்து சுகம் இருக்கின்றது. பிறகு என்ன, நான் மனநிறைவோடு தானே இருக்கின்றேன், இது போதாதா நான் இந்த நிலத்தைப் பெறுவதற்கு?’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, பணக்காரர் பெரியவரின் வீட்டுக் கதவைத் தட்டினார்.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுப் பெரியவர் வெளியே வந்தார். அவரைக் கண்டதும், பணக்காரர், “அறிவிப்புப் பலகையைப் பார்த்தேன். எல்லா வசதி வாய்ப்புகளுடன் நான் மனநிறைவோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அதனால் எனக்கு இந்த நிலத்தைத் தாருங்கள்” என்றார். பணக்காரர் இவ்வாறு பேசி முடித்ததும், பெரியவர் அவரை மேலும் கீழும் பார்த்தார். பின்னர் பெரியவர் பணக்காரரிடம், “எல்லா வாய்ப்பு வசதிகளுடனும் மனநிறைவோடு இருக்கின்றீர்கள் என்றால், இந்த நிலம் உங்களுக்கு எதற்கு?” என்றார். இதற்கு அந்தப் பணக்காரரால் பதில் எதுவும் பேச முடியாததால், அவர் அங்கிருந்து வேகமாக நகர்ந்தார்.

பலரும் இந்த நிகழ்வில் வருகின்ற பணக்காரரைப் போன்று எல்லா வசதி வாய்ப்புகளும் இருந்த போதும், இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற பேராசையோடு இருப்பதைக் காண முடிகின்றது. இந்நிலையில் இன்றைய நற்செய்தியில் இயேசு, எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதீர்கள் என்கிறார். அது குறித்து நாம் சிந்திப்போம்.

**திருவிவிலியப் பின்னணி:**

யூதர்களைப் பொறுத்தவரையில், தலைச்சன் பிள்ளைக்குச் சொத்தில் இரண்டு பங்கு கொடுக்க வேண்டும் (இ.ச: 21:17). நடைமுறை இப்படி இருக்கையில், இன்றைய நற்செய்தியில் இயேசுவிடம் வருகின்ற ஒருவர், “போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக் கொள்ளுமாறு என் சகோதரருக்குச் சொல்லும்” என்கின்றார். சொத்தில் தலைச்சன் பிள்ளைக்கு இரண்டு பங்கு சேரும் என்பதால், சொத்தைப் பங்கிட்டுக் கொள்வதற்கு வழியே இல்லை என்பதால், இயேசு அவரிடம், “என்னை உங்களுக்கு நடுவராகவோ, பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியது யார்” என்கிறார்.

இயேசுவுக்குத் தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் இருந்ததால் (யோவா 5:22), அவர் நடுவர்தான். ஆனால், அவரைச் சாதாரண ஒரு பிரச்சனைக்குத் தன்னை நடு–வராக இருக்குமாறு அந்த மனிதர் சொன்னபோது தான், இயேசு அந்த மனிதரிடம் அப்படிச் சொல்கின்றார். தொடர்ந்து இயேசு அவரிடம், “எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள்” என்கிறார். அதனை விளக்க இயேசு அறிவற்ற செல்வந்தன் உவமையையும் சொல்கின்றார்.

மிகுதியாக உடைமைகளைக் கொண்டிருப்பதால் மட்டும் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது என்பதால், நாம் ஏன் ஆண்டவரை ஒப்பற்ற செல்வமாகப் பற்றிக்கொண்டு வாழக்கூடாது? சிந்திப்போம்.

**சிந்தனைக்கு:**

என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே, நான் பெறும் ஒப்பற்ற செல்வம் (பிலி 3:8),

செல்வத்தைச் சேர்க்க விரும்புவர்கள் சோதனையாகிய கண்ணியில் சிக்கிக் கொள்கிறார்கள் (1 திமொ 6:9).

ஆண்டவரை நாடுவோர்க்கு நன்மை ஏதும் குறையாது (திபா 34:10)

**இறைவாக்கு:**

‘ஆகவே, அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்” (மத் 6:33) என்பார் இயேசு. எனவே, நாம் ஆண்டவருக்கு ஏற்புடையவற்றை நாடி, இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

மறைத்திரு. மரிய அந்தோணிராஜ், பாளையங்கோட்டை மறைமாவட்டம்.

# தவக்காலம் ~ நம்பிக்கையின் காலமா!

## அருட்பணி. குழந்தை இயேசு பாபு

மு. வா: 1 சாமு: 16: 1டி, 6–7, 10–13
ப. பா: திபா: 23:1–3, 3–4, 5, 6
இ. வா: எபே: 5:8–14
ந. வா: யோவா: 9: 1–41

தவக்காலம் நம்பிக்கை நிறைந்த வாழ்வுக்கு வழிகாட்டுகின்றது. நம்பிக்கை இல்லையென்றால் கிறிஸ்துவ வாழ்வே கிடையாது. நம்பிக்கையில் தான் கிறிஸ்தவம் அடங்கியுள்ளது. எனவேதான் ஒரு குழந்தை திருமுழுக்கு பெறுகின்ற பொழுது நம்பிக்கை அறிக்கையை பெற்றோரும் ஞானப் பெற்றோரும் சொல்லி தங்களுடைய நம்பிக்கை வெளிப்படுத்துகின்றனர். திருஅவையால் நமக்கு கொடுக்கப்பட்ட ஏழு அருள்சாதனங்களும் நாம் நம்பிக்கை நிறைந்த வாழ்வு வாழ நமக்கு வழிகாட்டுகின்றன. "இயேசு தூய ஆவியின் வல்லமையால் கன்னிமரியிடமிருந்து பிறந்தார். 30 ஆண்டுகள் தன்னையே ஆயத்தப்படுத்தி யோர்தான் ஆற்றங்கரையில் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அதன்பிறகு நாற்பது நாட்கள் அலகையால் சோதிக்கப்பட்டார். சோதனையை வென்ற பிறகு மூன்றாண்டுகள் இறையாட்சி பணியினைச் செய்தார். இந்த உலகம் மீட்புப் பெற கொடூரமான சின்னமாகக் கருதப்பட்ட சிலுவைச் சாவை ஏற்றார். இறந்த பிறகு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவர் விண்ணகம் சென்று தந்தையின் வலப்பக்கத்தில் வீற்றிருந்து வாழ்வோருக்கும் இறந்தவருக்கும் தீர்ப்பினை வழங்க வந்திடுவார்" போன்றவை கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நம்பிக்கையாக இருக்கின்றது. மேற்கூறியவற்றை நாம் ஆழமாக நம்பினால் மட்டுமே நாம் கடவுளை முழுமையாக அன்பு செய்து நம்பிக்கை வாழ்வில் நிலைத்திருக்க முடியும்.

நம்பிக்கை வாழ்வு என்பது பேரளவில் கிறிஸ்தவராக இருப்பதல்ல மாறாக, உயிர்த்துடிப்புள்ள நம்பிக்கையாளராக இருப்பது, நம்முடைய நம்பிக்கை வெறும் கோட்பாடாக மட்டும் இருக்காமல் செயலாக்கம் பெற வேண்டும். இதைத்தான் திருத்தூதர் யாக்கோபு தன்னுடைய திருமுகத்தில் "செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம் "என கூறியுள்ளார். நம்முடைய நம்பிக்கை செயலாக்கம் பெற வேண்டும். அதிலும் குறிப்பாக நம்முடைய அன்றாட வாழ்வில் சமூகம், அரசியல், பொருளாதாரம், கல்வி, முழு மனித விடுதலைக்கான செயல்பாடுகள் போன்றவற்றில் நம்முடைய இறைநம்பிக்கை வெளிப்பட வேண்டும். தவக்காலத்தில் நம்முடைய நம்பிக்கை வாழ்வை இன்னும் ஆழமாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இன்றைய நற்செய்தியில் "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். "(யோவான்3:16) என்ற வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம். இவ்வார்த்தைகளை ஆழ்ந்து தியானித்தால் நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் கடவுள் தன் மகன் வாயிலாக நிலைவாழ்வு அளிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார் என்ற உண்மை புலப்படுகிறது.

ஒருமுறை எனது நண்பர் அவருடைய வாழ்வில் நடந்த இச்சிறுநிகழ்வைப் பகிர்ந்து கொண்டார். அவருடன் பணிபுரியும் ஒரு ஏழைப் பெண்மணி சற்று கவலையாக தொலைப்பேசியில் பேசிவிட்டு, தன்னுடைய வேலையைத் தொடர்ந்தார். அவருடைய கணவர் இரு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக வேலைக்குச் செல்ல இயலாத நிலையில் இருந்தார். இரு குழந்தைகளின் படிப்பு செலவு, கணவரின் மருந்து செலவுகள், வீட்டுத் தேவை அனைத்தையும், தான் வாங்கும் சிறு சம்பளத்தைக் கொண்டு சமாளிக்க மிகவும் திணறினார் அப்பெண்மணி. திடீரென அவரையே அறியாமல் அவருடைய சேமிப்பிலிருந்து ஒரு சிறு தொகையை அப்பெண்ணிடம் கொடுத்தார் என் நண்பர். கண்களில் கண்ணீருடன் "நாளை என் பிள்ளைகளுக்கு உணவு கொடுக்கக்கூட பணமில்லாமல் இருந்தேன். சாலையில் நடந்து வரும் போது ஆண்டவரே நீர்தான் எனக்கு வழிகாட்டவேண்டும். நான் வீட்டிற்கு செல்லும் போது ஏதாவது ஒரு வகையில் நீர் உதவ வேண்டும் என்று நம்பிக்கையோடு ஜெபித்துக்கொண்டு வந்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. நான் கேட்காமலேயே நீங்கள் உதவியிருக்கிறீர்கள் "எனச் சொல்லி நன்றியுடன் அத்தொகையைப் பெற்றுக்கொண்டார். அன்று அப்பெண்மணியின் நம்பிக்கை அவருக்குப் பாடமாக இருந்ததாகத் தன் பகிர்வினை நிறைவு செய்தார்.

கடவுள் மீது நம்பிக்கை கொள்பவர்கள் மட்டுமே கடவுளின் அன்பையும், அருளையும், இரக்கத்தையும், மகிழ்ச்சியையும் நிறைவாகப் பெறமுடியும். பழைய ஏற்பாட்டில் நம்பிக்கை வாழ்வுக்கு பல உதாரணங்களைக் கூறலாம். குறிப்பாக நோவா நம்பிக்கை நிறைந்த வாழ்வுக்கு முன்னுதாரணமாக இருக்கிறார். நோவாவின் காலத்தில் அவர் காலத்து மக்கள் கடவுளுக்கு எதிராக பல பாவங்கள் செய்து, கடவுளின் அருளை இழந்தனர். எனவே கடவுள் இந்த உலகத்தை அழிக்க வேண்டும் என்று நினைத்த பொழுது, நோவாவின் நம்பிக்கையும் நேர்மையும் கடவுளின் பார்வையில் உயர்ந்ததாய் இருந்தது. எனவே கடவுள் நோவாவையும் அவரின் குடும்பத்தையும் காப்பாற்றினார். நம்பிக்கை நிறைந்த வாழ்வுக்கு ஆபிரகாம் மிகச் சிறந்த உதாரணம் ஆவார்.



ஆபிரகாமின் நம்பிக்கையின் உச்சம் தன்னுடைய ஒரே மகன்

எனவே கடவுள் நோவாவையும் அவரின் குடும்பத்தையும் காப்பாற்றினார். நம்பிக்கை நிறைந்த வாழ்வுக்கு ஆபிரகாம் மிகச் சிறந்த உதாரணம் ஆவார். ஆபிரகாமின் நம்பிக்கையின் உச்சம் தன்னுடைய ஒரே மகன் ஈசாக்கை பலியிட முன்வருவதன் வழியாக வெளிப்படுகின்றது. பல ஆண்டுகளாக காத்திருந்து, வயதான தன்னுடைய மனைவி சாராவின் வழியாகக் கொடையாகப் பெற்ற தன் மகன் ஈசாக்கை கடவுள் பலியாக கேட்டபொழுது, ஒரு தந்தையாக துன்பப்பட்டாலும், கடவுளின் நம்பிக்கையாளராக பலியிட முன்வந்தார். எனவே கடவுள் ஆபிரகாமையும் அவரின் வழி–மரபையும் மென்மேலும் ஆசீர்வதித்தார். இதன் வழியாக நாம் அறிந்து கொள்வது ஆழமான நம்பிக்கைதான், நமக்கு நிறைவான ஆசீர்வாதத்தை கொடுக்கும்.

ஆனால் அந்த நிறைவான ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள, துன்பத்தின் மத்தியிலும் சோதனைகளை வென்று நம்பிக்கைக்குச் சான்று பகர வேண்டும். தாவீது நம்பிக்கை நிறைந்த வாழ்வுக்கு முன்னுதாரணமாக இருக்கிறார். கோலியாத்தை எதிர்த்துப் போராட பயந்து நடுங்கிய இஸ்ரயேல் மக்கள் மத்தியில், சிறுவன் தாவீது கடவுள் மீது ஆழமான நம்பிக்கை வைத்து கடவுளின் ஆற்றலால் வலிமை வாய்ந்த கோலியாத்தை வீழ்த்தினார். இதைப்போல புதிய ஏற்பாட்டிலும் நம்பிக்கை நிறைந்த வாழ்வுக்குப் பல நபர்கள் முன்னுதாரணமாக இருக்கின்றனர். நூற்றுவர் தலைவன், பெரும்பாடு பட்டு இயேசுவின் ஆடைவிளிம்பைத் தொட்டு குணமான பெண், இயேசுவின் பெயரால் அருஞ்செயல்கள் புரிந்த திருத்தூதர்கள் என வரிசைப்படுத்திக்கொண்டே செல்லலாம். அதே வேளையில் இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளாததால் அவருடைய சொந்த ஊர் மக்களிடையே இயேசு அருஞ்செயல்கள் புரியவில்லை எனவும் நாம் விவிலியத்தில் வாசிக்கிறோம்.

**நம்பிக்கை கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை.**

நம்பிக்கை நிறைந்த வாழ்வு மட்டுமே எத்தகைய துன்பங்களும், இடர்களும், பெருந்தொற்றுகளும் நம் வாழ்வில் வந்தாலும், அதை முறியடிக்கக் கூடிய ஆற்றலைக் கொடுக்கும். நம்பிக்கை நமக்கு நிலைவாழ்வைக் கொடுக்கும். எனவே கடவுள் நம்மை அன்பு செய்கிறார் என உணர்ந்து, அவ்வன்பை தன் மகன் வாயிலாக நமக்கு வெளிப்படுத்தி நமக்கு நிலையான நிறைவான வாழ்வை வாக்களிக்க காத்திருக்கிறார் என நம்பி நம் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோம்.

**இறைவேண்டல்**

அன்பு இறைவா! நாங்கள் உம்மேல் கொண்டுள்ள நம்பிக்கையில் ஒவ்வொரு நாளும் ஆழப்பட அருள் தாரும். ஆமென்.

# மயக்கமா கலக்கமா

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நாளை என்ன நடக்குமென்று எதையும் அறுதியிட்டு சொல்ல முடியாது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இன்பமும், துன்பமும் மாறி மாறி வந்து கொண்டு தான் இருக்கிறது. இன்பம் வரும்போது இயல்பாக இருப்பதும், துன்பம் வரும்போது துவண்டு போவதுமே வாடிக்கையாக இருக்கிறது.

தாவீது என்ற ராஜாவுக்கும் மனதில் கவலை இருந்தது. எத்தனை நாள் வேதனையுற்று எனக்குள் போராடுவேன் (தி.பா. 13:2) என்று புலம்புகிறார். ஆனால் தனக்கு வந்துற்ற கவலையை அவர் எப்படி சமாளித்தார்? அவர் கடவுளிடம் செபம் செய்தார், நம்பிக்கையுடன் வேண்டுதல் வைத்தார். தன் மனதில் இருந்ததை யெல்லாம் கடவுளிடம் கொட்டித் தீர்த்தார். தன் மீது கடவுள் அன்பு வைத்திருக்கிறார் என்றும், அவர் தனக்கு நிச்சயம் உதவு–வார் என்றும் திடமாக நம்பினார். அதனால் அவருடைய செபம் கேட்கப்பட்டது. நம்பிக்கை பலன் தந்தது. இதையேதான் புனித பேதுருவும் உங்கள் கவலைகளை–யெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள் என்று சொல்கிறார்.

நாளை என்ன நடக்குமென்று கவலைப்படுவதை விட்டு விடுங்கள். நாளைக்காக கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளைய கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும் (மத். 6:34) என்று இயேசு எடுத்துரைக்கின்றார். அதாவது இன்றைக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் யோசியுங்கள். நாளைய தினத்தை கடவுளிடம் ஒப்படைத்து விடுங்கள். இதைத் தான் கவியரசு கண்ணதாசன் « நாளைப்பொழுதை இறைவனுக்களித்து நடக்கும் வாழ்வில் நிம்மதி நாடு » என்று பாடுகிறார்.

எதை உண்போம், எதை குடிப்போம், எதை அணிவோம் எனக் கவலைக் கொள்ளாதீர்கள். உங்களுக்கு இவை யாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். அவரை மட்டும் நாடும்போது அவருக்கு ஏற்றவற்றை செய்யும்போது, உங்களுக்கு தேவையான அனைத்தும் சேர்த்துக் கொடுக்கப்படும் (மத். 6:31– 33) என இயேசு சொல்வதை கவனத்தில் கொள்வோம். பொருளாசையை விலக்கி வாழ்வோம். உள்ளதே போதும் என்ற மன நிலையைப் பெறுவோம். ஏனெனில் நான் ஒருபோதும் உன்னை கைவிடமாட்டேன் (எபி. 13:5) என்று கடவுள் கூறுகிறார். பணம்கூட நம்மை கைவிடக் கூடும். உற்றார், பெற்றார் கூட நம்மை கைவிடக் கூடும். ஆனால் கடவுள் மீது நம்பிக்கை வைத்து எளிமையான வாழ்க்கை வாழும்போது, அவர் ஒரு நாளும் நம்மை கைவிட மாட்டார் என்ற நம்பிக்கையுடன் நம் வாழ்வை தொடர்வோம்.

# இளையோர்க்கு இல்லை இடர்கள் என்போம்

**மறையாசிரியர் தி. ம. சந்தியாகு வேங்கிடக்குளம், இந்தியா.**

2012ம் ஆண்டு மே 2 தேதிகளில் சென்னை மயிலை உயர் மறைமாவட்டம், செங்கற்பட்டு வேலூர் ஆகிய மூன்று மறைமாவட்டங்களுக்காக வேப்பூர் என்ற இடத்தில் இருக்கும்புனித சவேரியார் ஆன்மீகப் பயிற்சிக் குருமடத்தில் இளையோருக்கான பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. அதில் சிறுகதை மற்றும் கவிதை எழுதும் பயிற்சி வழங்கும் உரைகள் ஆற்ற, செயல்பாட்டு வகுப்புக்கள் நடாத்த எனக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. அப்போது நான் எனது கவிதைப் பயிற்சியில் அங்கு பயிற்சிக்கு வந்திருந்த அருட்சகோதரர்கள்அருட்சகோதரிகள், ஆண்பெண் பொதுநிலை இளையோருக்ககு – "இளையோர் இல்லை இடர்கள் என்போம்" என்ற மையப் பொருளில் .... 16 – 24 வரிகளில் மரபுக்கவிதை அல்லது புதுக்கவிதை வடிவில் எழுதச்சொன்னேன். அதற்காக இருபது நிமிட நேரத்தையும் கொடுத்தேன். பங்கேற்பாளர்கள் 52 பேரில் 9 பேர் மிகவும் தடுமாற்றத்துடன் சிலவரிகளை மட்டும் எழுதிவிட்டு ஒய்ந்திருந்தனர். மீதமுள்ளோரில் பலர் புதுக்கவிதையினை எழுதி வழங்கினர். அவற்றை ஆய்வு செய்த குழு ஒரு கவிதையைத் தேர்வு செய்தது. அதில் ஒரு பகுதி இதோ– : "சொடுக்குப் போட்டு சோம்பித் திரியும் சுண்டெலி அல்ல நாங்கள், எதையும் முடுக்கி விட்டு முரசு கொட்டும் முயல்கள நாங்கள்".

இடர்கள் என்று எவற்றையும் காணோம். இலக்கு நோக்கிப் பயணிக்கும்போது படரும் தடைகளைப் பட்டென நாங்கள் படுகுழிக்குத் தள்ளி விடுவோம். உடன் வரும் உழைப்பை மட்டும் உதவிக்கு அழைத்து உற்சாக வெள்ளத்தில் உலா வருவோம். சுடர்கள் நாங்கள் சொல்லித்தருவோம், சுதந்திரம் மட்டும் கிடைத்தால் போதும். இளையோர் கூட்டம் எமக்கில்லை. இடர்கள் ஏற்போர் எவர்க்கும் அருகில் இருப்போர் யாமென்போம். இதனால் உலகில் எம்மைப்போன்றோர் என்றும் மறைவதில்லை. இதுவே எமது இதய முழக்கம் இனிக்கும் எம் நெஞ்சில்" என்று ஓர்இளம் பெண் எழுதியிருந்தார். ஆம் அது இன்றைக்கும் எவ்வளவோ பொருத்தமானது.

**இடர்கள் பற்றிய பார்வை**

இடர்களை 1. கருதப்படும் இடர்கள் என்றும், 2. காணப்படும் இடர்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். பொதுவாக பெரும்பாலானவை மனம் சம்பந்தப்பட்டவையே. எனவேதான் முதிர் நிலையினர் பலர் 'இளம் பருவம் பயம் அறியாது' என்பர்.

திருவிவியத்தில் ஏராளமான இளையோரது வாழ்வு இனிதே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. அவற்றில் இருவரது வாழ்வுப் பாடத்தை மட்டும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்போம். **இடர்களை எதிர்கொண்ட இளைஞன் தாவீது**

சாமுவேல் புத்தகத்தில் 17ம் அதிகாரத்தில் 1 முதல் 37 வசனங்கள் வரை வேகமாகவும் அதற்குப்பின் 38 முதல் 58வரை சற்று நிறுத்தி மிகவும் கவனமாகவும் ஆர்வத்தோடும் படியுங்கள். இதில் 4 பேருண்மைகள் புலப்படுகின்றன.

கோலியாத்து பெலிஸ்தியர் இனத்தில் மிகவும் பிரபலமானவன். போர்ப் பயிற்சியும், காண்பதற்கே மிகவும் பயத்தை ஏற்படுத்தும் உருவம் கொணடவன். கோலியாத்தை வெல்பவருக்கு மன்னர் சவுலால் தம் மகளையும் பெரும் சொத்தையும் அளிப்பதாக இனிக்கும் வாக்குறுதிகள். அவனோடு போரிட இஸ்ராயேலர் எவரும் விரும்பவில்லை.

**தாவீதின் அனுபவம்** –

தமது மந்தையைப் பிடித்து கொன்று உண்ணவரும் கொடும் விலங்குகளான சிங்கம்,புலி போன்றவற்றையே வெற்றி கணட அனுபவம்.

இறை நம்பிக்கை – விருத்தசேதனம் இல்லாதவர் எப்படி போரில் வெற்றிபெற முடியும். அதற்குக் கடவுள் விடவே மாட்டார். எனவே அவர் பெயரால் கோலியாத்தை எதிர்கொள்ளப்போகும் எனக்கு வெற்றி நிச்சயம். எனவே எதிர்வரும் இடர்கள் எதுவும் இல்லையெனக் கருதி ஐந்து வளவளப்பான கூழாங்கற்களைக் கொண்டு மட்டும் கோலியாத்தைக் கொன்று

1. இனத்தைக் காத்தான்.
2. தன்னை அடையாளப்படுத்தினான்.

புதிய ஏற்பாட்டில் மத்தேயு 19:16–30 பகுதியில் சுட்டிக்காட்டப்படும். 'இயேசுவை பின்பற்ற விரும்பிய செல்வரன இளையோர்.' அவருக்கும் 4 இடர்கள் கட்டளைகளின்படி நடப்பவர் என்று தம்மைக் காட்டிக்கொள்கிறார்.

இயேசுவின் புதிய கட்டளையான 'உம் உடமைகளை விற்று ஏழையருக்குக் கொடும்' என்ற இயேசுவின் கட்டளை கசக்கிறது. உடமைகள் இல்லாவிட்டால் ஒருவரும் மதிக்க மாட்டார்கள் என்ற கலக்கம்: உடமைகளே ஒருவருக்கு வலிமை என்ற எண்ணம். ஆம் உண்மையான இறையாட்சி நெறியை விரும்பும் இளையோர். எவற்றையும் இடர்களாக கருதுவதில்லை. இயேசுவை பின்பற்றிய சீடர்கள வாழ்வின் ஆதாரமான வலையைத் துறந்தனர். தாங்கள் உருவாகக் காரணமாயிருந்த பெற்றோரைத் துறந்தனர். பொருள்இல்லாமல் சாதனை வாழ்வுச் சாத்தியமில்லை என்ற பார்வை வேறு வேறு விதமான இடர்களையும் மனதில் கொள்ளாது 'ஆம்' என்று சொல்லிஆண்டவரின் தாயான மரியா (காண். லூக்1:38) இயேசுவின் வளர்ப்புத் தாயான யோசேப் மோசே, யோசுவா போன்றோர் யூதித்,எஸ்தர் போன்ற வீராங்கனைகள் மக்கபேயர் நூல் சுட்டிக்காட்டும் ஏழு இளையோர். (2 மக்) திருத்துதர்கள் திருமுழுக்கு யோவான் திருத்துதர் பவுல் (திப. 9ஆம் அதிகாரம்) நெருக்கடி தரும் இடுக்கண்களை நினைவில் கொள்ளாமல் நிலைவாழ்வின் ஊற்றான இயேசுவையே தங்கள் ஆதாரமாகக் கொண்டிருந்தனர். எனவே அவர்களுக்கு எதுவுமே இடுக்கணாகத் தெரியவில்லை.

## மாற்றங்களை மாற்றுவோம்

இருபத்தைஞ்சு வருஷத்துக்கு முன்னால ஒரு கல்யாணவீட்டுக்கு போனோம்னா...ஆண்கள் அமர்வதற்கு இரும்பு சேர் அல்லது மர சேர் போடப்பட்டிருக்கும். பெண்கள் அமர கலர் கலரா பவானி ஜமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கும்.

சின்ன சின்ன பசங்க எல்லாம் ஓடியாடி விளையாடி கொண்டிருப்பார்கள். பெரியவர்கள் தாம்பூலம் நிறைந்த வாயோடு அரசியல் முதல் அகில உலக கதை வரை பேசிக்கொண்டு இருப்பார்கள்.

மண்டபத்துல ஓர் ஓரமா பச்ச பெல்ட் கட்டுன பெருசுங்க எல்லாம் சட்டைய கழட்டி போட்டுட்டு ரம்மி விளையாடிக்கொண்டு இருப்பார்கள். சட்டைப்பையில் டெஸ்ட்டரோடு அங்கேயும் இங்கேயும் திரியும் மைக்செட் காரரை ஏதோ விஞ்ஞானி மாதிரி பார்ப்பார்கள். விஷேஷத்துக்கு வாகனங்களை இயக்கும் ஓட்டுனர்களை பைலட் ரேஞ்சுக்கு மதித்து அவர்களை உபசரிப்பார்கள்.

வழ வழப்பான சில்க் துணியில் பெரிய காலரோடு சட்டை அணிந்து, தலை முடியை வித்தியாசமாக சீவியிருக்கும் இளைஞர்களை ஹீரோ போல பார்ப்பார்கள்.


விஷேஷத்துக்கு இருசக்கர வாகனங்களில் வந்தாலே தனிமதிப்புண்டு. அதிலும் புல்லட் ,எஸ்டி, ராஜ்தூத் "சில்வர் ப்ளஸ் போன்ற வாகனங்களில் வருவோருக்கு சிறப்பு மரியாதை நிச்சயம் உண்டு. சாப்பாட்டு பந்தியில் நிச்சயம் ஒரு சண்டையும் கோபித்து கொண்டு அடம்பிடிக்கும் நிகழ்வும் நடக்கும்.

இப்படியாக.. ஒரு விஷேஷத்துக்கு போயிட்டு வந்தோம்ன்னா அங்கு நடந்த நிகழ்வுகளின் நினைவு சுவடுகள் மறைய மாதங்களோ, வருடங்களோ ஆகும்.

இப்ப இந்த பாழாய் போன செல்போன் வந்துச்சோ...குறிப்பா இணைய வசதியோட ஆண்ட்ராய்டு கைப்பேசிகள் வந்துச்சோ... அப்போ மறைந்து போனது மனித நேயமும் சக மனித நட்பு பாராட்டலும். இப்போல்லாம்....

ஸ்சுல, ட்ரையின்ல, கல்யாண வீட்டுல எழவு வீட்டுல, பார்க்குல, பீச்சுல, தியேட்டர்லனன்னு....இப்படி எங்கெங்கு போனாலும் குனிந்த தலை நிமிராம, பக்கத்துல என்ன நடக்குதுன்னு கூட தெரியாம கைப்பேசியே கதின்னு கிடக்குறோம். காக்கா கத்துது...மாமாவும் அத்தையும் வரப்போறாங்கடான்னு ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கி அந்த உறவுகளின் வருகைக்காக ஏங்க வைத்த தாய்மார்களின் குரல்கள் மழுங்கடிக்கபட்டு... வாட்சப் வீடியோ கால்களின் சத்தங்கள் சகல வீடுகளிலும் ஒலிக்க தொடங்கிவிட்டது. விஞ்ஞான வளர்ச்சி அவசியம்தான். அதுவே நம் மெய்ஞானத்தை அழிக்கிற காரணியாக மாறிவிடக்கூடாது.

## இறை இரக்க ஞாயிறு (Divine Mercy Sunday)



பொதுவாக ஈஸ்டருக்கு அடுத்த ஞாயிறு நாம் இறை இரக்கத்தின் ஞாயிறு என்று கொண்டாடுகின்றோம். எம்மில் பலருக்கு அது ஏன், எதற்கு என்று தெரியாது. தெரியாமலே நாம் நிறைய விடயங்களை செய்து கொண்டிருக்கின்றோம், கடந்து செல்கின்றோம். இந்த இறை இரக்கத்தின் ஞாயிறு எதற்காக நாம் கொண்டாடு கின்றோம், இதன் வரலாறு என்ன என்பதை தெரிந்துகொள்வோம். 1930ம் ஆண்டு யேசு சிஸ்ரர் பவுஸ்தினாவுக்கு காட்சி கொடுக்கின்றார். அந்தக் காட்சியைத்தான் இறை இரக்க ஞாயிறு என்று கொண்டாடுகின்றோம். அது என்ன காட்சி என்றால் காட்சியில் மூன்று முக்கிய விடயங்கள் நடக்கின்றது. முதலாவது என்னவென்றால் இயேசு சிஸ்ரர் பவுஸ்தீனாவிடம் மிகவும் அழகாகச் சொல்கின்றார் ஆண்டவரின் அன்பானது இரக்கம் நிறைந்த அன்பு. அந்த இரக்கத்தை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மக்களிடம் அந்த இரக்கத்தை கொண்டு செல்லும்படி கேட்டுக்கொண்டார்.

இரண்டாவதாக இயேசு அவருக்கு காட்சி கொடுக்கும் போது இயேசுவின் இதயத்திலிருந்து இரண்டு கதிர் வீச்சுக்கள் வந்தது. அது ஒன்று சிவப்பு நிறத்திலும் மற்றது நீல நிறத்திலும் இருந்தது. சிவப்பு எதைக் குறிக்கிறது என்றால் இயேசுவினுடைய இரத்தத்தைக் குறிக்கிறது. நீலக் கதிர் எதைக் குறிக்கிறது என்றால் தண்ணீரைக் குறிக்கின்றது. அதாவது தண்ணீர் திருமுழுக்கை நினைவுபடுத்துகின்றது. நம்மைப் பாவத்திலிருந்து கழுவுகிறது. இரத்தம் எதைக் குறிக்கின்றது என்றால் நற்கருணையைக் குறிக்கிறது. யோவான் நற்செய்தியில் இயேசு சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கின்றார் படைவீரன் ஒருவன் அவர் விலாவில் ஈட்டியால் குத்துகின்றான். குத்தும் போது அவரது விலா விலிருந்து இரத்தமும் தண்ணீரும் வழிந்தோடியது. இதைத்தான் இயேசு இறை இரக்கத்தில் ஒரு குறியீடாக பிரதிபலிக்கிறார்.

மூன்றாவதாக இயேசு சிஸ்ரர் பவுஸ்தினாவிடம் இறை இரக்கத்தின் ஜெபத்தை ஒழுங்காக சொல்ல வேண்டும் என்றும் கூறியிருந்தார். நம்மில் பலரும் சரியாக மூன்று மணிக்கு இந்த ஜெபத்தை சொல்லுகின்றோம். எனவேதான் இது மிகவும் சக்தி வாய்ந்த செபம் தயவு செய்து இந்த செபத்தை சொல்லுங்கள் என்று பலராலும் வலியுறுத்தப்படுகின்றது. இறை இரக்கத்தின் ஞாயிறன்று நாம் நினைவு கூரப்பட வேண்டிய

**முக்கியமான மூன்று விடயங்கள்**

1. அவரது இரக்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்.
2. அவரது இரக்கத்தை நாம் அனுபவிக்க வேண்டும்
3. நாம் அனுபவித்த அந்த இரக்கத்தை நம் கூட இருக்கிற மற்றவர்களுக்கும் இரக்கம் காட்டுபவர்களாக இருக்க வேண்டும்.

ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்.ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.அல்லேலூயா. (மத்5:3)

# இறைவன் கொடுத்திருக்கும் வாய்ப்பை நழுவவிடலாமா?

அவர் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி அவர் வளர்க்கும் நாய்க்கு டயமண்ட்" என்று பெயர். அதை அன்பாக வளர்த்துவந்தார். ஒருநாள் மாலை அவர் உலாவச் சென்றபோது, அவரது மேஜையின் மீது எரிந்துகொண்டிருந்த மெழுகுவர்த்தியை அணைக்காமல் சென்றுவிட்டார். அன்பாக வளர்த்த அந்த நாய், தான் செய்வது என்னவென்று தெரியாமல், தன் காலால் மெழுகுவர்த்தியைக் கீழே தள்ளிவிட்டுவிட்டது. இதனால் மேஜையின் மேல் அந்த விஞ்ஞானி வைத்திருந்த காகிதங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிப் போயின. அவை வெற்றுக் காகிதங்கள் அல்ல, விஞ்ஞானியின் 20 ஆண்டுகால ஆராய்ச்சியின் முடிவுகள் அடங்கிய முக்கியமான ஆவணங்கள்.

விஞ்ஞானி வீடு திரும்பியதும், தன் ஆராய்ச்சி முடிவுகள் அடங்கிய காகிதங்கள் சாம்பலாகிக் கிடப்பதைக் கண்டு அதிர்ந்தார். பிறகுதான் இது தனது செல்ல நாயான டயமண்ட்டின் திருவிளையாடல் என்பது அவருக்குப் புரிந்தது. அவர் வீடு திரும்பியதும், தான் செய்த செயலின் தீவிரம் புரியாத அந்த நாய், வாலைக் குழைத்தபடி அவரை அன்பாக வரவேற்றது. விஞ்ஞானியோ, சிறியோர் செய்த பிழையெல்லாம் பெரியோர் பொறுப்பது கடனே" என்பதுபோல பதிலுக்கு நாயை தழுவி அணைத்து அன்பு காட்டிவிட்டு தனது பணியைத் தொடர்ந்தார். டயமண்ட் நீ செய்த சிறிய காரியத்தின் விளைவுகளை நீ அறிய மாட்டாய்..." என்று அந்த வாயில்லா ஜீவனிடம் சொல்லிவிட்டு மீண்டும் தனது பணியைத் தொடர்ந்தார்.

தனது 20 ஆண்டுகால உழைப்பை, ஒன்றுமில்லாமல் செய்ததற்காக அந்த நாயை அவர் உண்டு, இல்லை என்று செய்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் அதனிடம் பொறு மையாக நடந்துகொண்டது பாராட்டுக்குரியது. அந்த விஞ்ஞானி எப்படி தன் வாழ்வில் பொறுமையைக் கடைப்பிடித்தாரோ, அதேபோலதான் நம் ஆண்டவராகிய கடவுளும் நாம் எத்தகைய தவறுகளைச் செய்தாலும் அவற்றைப் பொறுத்துக்கொண்டு நாம் மனம் திருந்தி நடக்க வேண்டும் என்பதற்காக பொறுமையுடன் இருக்கிறார். ஆண்டவராகிய கடவுளின் நீடிய பொறுமையையும் அவரி டத்தில் இருக்கும் பெருந்தன்மையையும் நமக்கு எடுத்துச் சொல்லும் விதத்தில் இருக்கிறது இந்த நிகழ்வு.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, வயலில் தோன்றிய களை-களை உவமையாகக் கூறுவதைப் பார்ப்போம். அதாவது, நிலக்கிழார் ஒருவர் தன் தோட்டத்தில் நல்ல கோதுமை மணிகளை விதைக்க, அவருடைய பகைவரோ அவருக்குத் தெரியாமல் அவரது நிலத்தில் களைகளை விதைத்துவிட்டுச் செல்கிறார். இதையறிந்த நிலக்கிழாரின் பணியாளர்கள் அவரிடம் வந்து, நடந்ததை எடுத்துக்கூறினார்கள்.




அப்போது அவர் அவர்களிடம், "களைகளைப் பறிக்கும்போது அவற்றுடன் சேர்த்து கோதுமையையும் நீங்கள் பிடுங்கிவிடக்கூடும். அறுவடை வரை இரண்டையும் வளரவிடுங்கள்'' என்று சொல்லி விட்டார். அறுவடை நேரத்தில் அறுவடை செய்பவர்களிடம், "முதலில் களைகளை பறித்துக் கொண்டு வந்து எரிப்பதற்கெனக் கட்டுகளாகக் கட்டி வையுங்கள். கோதுமையை மட்டும் என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்'' என்றார்.

இங்கே நிலக்கிழாரின் மூலம் வெளிப்படும் இயேசுவின் வார்த்தைகள், ஆழமாகச் சிந்திக்கவேண்டியவை. நிலக்கிழார் தன் நிலத்தில் கோதுமை மணிகளை விதைத்தபோது, "நல்ல விதைகளை விதைத்தார்' என்ற வார்த்தைகள், "இந்த உலகம் படைக்கப்பட்டபோது எல்லாம் நல்லவையாகவே இருந்தன. தீமைகள் இடையில்தான் நுழைந்தன' என்பதைக் குறித்துக் காட்டுவதாக இருக்கின்றன. அதற்கடுத்து களைகளை அகற்றும்போது சிலநேரங்களில் நல்ல செடிகளும் அகற்றப்படும் என்பதால், நிலக்கிழார் எல்லாவற்றையும் கடைசியில், அதாவது "அறுவடையின் போது அகற்றலாம்' என்கிறார். இந்த வார்த்தைகள் உலக முடிவின் போது ஒவ்வொருவருக்கும் அவரவர் செயல்களுக்கு ஏற்ப தீர்ப்பு வழங்கப்படும் என்பதை எடுத்துச் சொல்கின்றன. ஆனாலும், இறைவன் அவ்வளவு காலத்தைக் கொடுப்பதற்குக் காரணம், அந்த கால இடைவெளியில் தீயவர்கள் மனம் திரும்ப வேண்டும் என்பதே.

சீராக்கின் ஞான நூலில், ஆண்டவர் பொறுமையுள்ளவர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மை, நாம் ஒவ்வொருவரும் மனம் மாற வேண்டும் என்பதற்காகவே அவர் மிகவும் பொறுமையாக இருக்கிறார். ஆகவே, அவருடைய பொறுமையையும் இரக்கப் பெருக்கத்தையும் உணர்ந்து, நாம் நம் குற்றங்களை உணர்ந்து, திருந்தி வாழ்வதே சிறப்பான செயல். எனவே, இறைவன் நமக்குக் கொடுத்திருக்கும் வாய்ப்பை நழுவவிடாமல், மனம் திருந்தி இறைவனுக்கு உகந்த வழியில் நடப்போம். அதன் வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்!

# தேவதாயின் மாதம்! இதுவல்லவோ!



**வைகாசி மாதம் வையகத்தின் அரசியை நம் அன்னையைப் புகழும் மாதம். குடும்பமாகவோ, குழுக்களாகவோ, இல்லங்களிலும் ஆலயங்களிலும் கூடியமர்ந்து செபிக்கும் மாதம்.**

மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம் மே மாதம். அவரது அன்பையும், அரவணைப்பையும், ஆற்றலையும், துன்பங்களையும் கண்டு துவண்டு விடாத பொறுமையையும், தியாகத்தையும் அவரது தெய்வீகப் பெருமைகளையும் போற்றி பாடும் மாதம்.

வைகாசி மாதம் வையகத்தின் அரசியை நம் அன்னையைப் புகழும் மாதம். குடும்பமாகவோ, குழுக்களாகவோ, இல்லங்களிலும், ஆலயங்களிலும் கூடியமர்ந்து செபிக்கும் மாதம். செபமாலை சொல்லி ஜெயத்தினை அடையும் மாதம். இத்தகு செப வழிபாட்டை அநேக திருத்தந்தையர்கள் முக்கியமாக பன்னிரெண்டாம் பயஸ் போன்றோர் ஊக்குவித்துள்ளார்கள்.



மாதாவின் பீடத்திற்கு முன் அனைவரும் அவர் பாதம் அமர்ந்து, செபமாலைச் சொல்வதைப் பார்ப்பதே இனிமையான காட்சியாக இருக்கும். தங்களுடைய அன்றாட வேலைப் பளுவினின்று விடுபட்டு வீட்டிற்கு வந்ததும் குடும்பத்தார் அனைவரும் விரும்பத்தக்க முறையில் இதயத்தால் இணைந்து செபிப்பது. இறைவனையும், அன்னையையும் மகிழ்ச்சிப்படுத்தக்கூடிய ஒரு பக்தி முயற்சியாகும்.

இனிய அன்பினால் குடும்பத்தார் அனைவரையும் இணைக்கும் கயிறாக செபமாலை விளங்குகின்றது. மேலும் வேறு வேலை விடயமாக செபத்தில் ஈடுபட்டுள்ளார்கள். மரித்தவர்கள் என்று அனைவருக்காகவும், செபிக்கும்போது அனைவரையும் இணைக்கும் ஒரு பாலமாக இப்பக்தி முயற்சி விளங்குகின்றது. மாதாவின் பீடத்தைச் சுற்றி நாம் அனைவரும் அமரும் போது, அன்னை மரியும் நம்மோடு வந்து அமர்கின்றார். அன்னையுடன் அவர் மகன் இயேசுவும், உடன் வருகிறார். மகனோடு பிதாவும் தூய ஆவியானவரும் அங்கு பிரசன்னம் ஆகின்றார் . இவர்கள் வந்ததும் விண்ணகத்தில் இருக்கும் அனைத்துப் புனிதர்களும் தேவ தூதர்களும் வர விண்ணகமே திரண்டு நம் இல்லத்தில் அமர்ந்திருக்கும் அந்தக் காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள்.

எத்துணை பேரின்பம் அங்கு நாம் செபித்து வேண்டி கேட்கும் காரியங்களை அள்ளி வழங்கும் அருட்கூட்டம். எனவே அன்னை மரியின் அன்பையும், அருளையும் பெற குடும்பமாய் அவர் பாதம் அமர்வோம். கூடியமர்ந்து செபிப்போம். செபமாலை சொல்லுவோம். புகழ்பாக்களை பாடி அவரைப் போற்றுவோம். அன்னையின் அருளை நிறைவாகப் பெறுவோம். கூடி செபிக்கும் குடும்பம் கோடி நன்மை பெறும்.

# உழைப்பு

"உழைப்பு மகிழ்ச்சிக்குத் தந்தையாகும்" என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.
"உழைப்பு கல்லிலிருந்து கூட ரொட்டியை உண்டாக்கும்" என்கிறது ஜெர்மனி பழமொழி
"உழைப்பவன் வீட்டிற்குள் வறுமை எட்டிப் பார்க்காது" என்கிறது இங்கிலாந்து பழமொழி.

அடிமைபோல் உழைப்பவன், அரசனைப் போல் உயர்வான். உழைப்பு நம்மை ஏமாற்றுவதில்லை. உழைப்பு நமது உடலை வலிமைப்படுத்தும். உழைப்பே உயர்வு என உழைப்பு இரண்டு வகைப்படும். அறிவால் உழைப்பவர்கள் தன்னை உணர்ந்தவர்கள். உடலால் உழைப்பவர்கள் தன்னை மறந்தவர்கள் என்பது அனுபவ கூற்று. உழைப்பினால் பெயரும் புகழும், செல்வாக்கும் மேன்மை பெறும். உழைப்பை நாம் உயர்ந்தவர்களை உத்தமர்கள் என்று உலகம் பாராட்டிப் போற்றுகின்றது. உழைக்க தயாராக இருந்தால், வான் உள்ளளவும் உயர வாய்ப்புள்ளது. உழைப்பால் உயர்ந்தவர்களை உலகம் இனங்கண்டு பாராட்டிப் புகழ்கிறது உழைப்பவர்களே உலக வரலாற்றில் நினையான இடம் பெறுகின்றார்கள். கடின உழைப்பாளர் புனித வளனார். அதாவது புனித சூசையப்பர் இவர் திரைக்கடல் போன்ற தச்சு வேலை பார்த்து இயேசுவையும், மரியாளையும் பராமரித்து வந்தார்.

தன் தொழிலை அன்பு செய்தார். இறைமகன் இயேசுவே உதவியாக இருந்து தன் வளர்ப்புத் தந்தைக்கு தச்சு தொழில் செய்ய உதவினார். தொழிலாளர் தினத்தை நினைவுகூறும் நாம், நாங்கள் செய்யும் எந்த தொழிலானாலும் அதைப் பெரிதாகக் கருதி அதனை அன்பு செய்து எங்கள் குடும்பங்களையும், சமூகத்தையும் காப்பாற்றுவோம். புனித சூசையப்பர் இறைவனின் திருவுளத்தை தமது பணியால் நிறைவு செய்ததுபோல, நாங்களும் எமது தொழிலால் இறைவனின் திருவுளத்தை நிறைவு செய்ய எமக்கு உதவி செய்யும். எந்த ஒரு வரமும் எப்போதாகிலும் நான் புனித வளனாரிடம் மன்றாடி கேட்டு கிடைக்காது போனதென்று என்னால் சொல்ல இயலாது. என்றார் புனித அவிலா திரேசாள்.
அவரின் நம்பிக்கையை நமதாக்கி எமது தொழில் துறைகளை ஆசீர்வதித்தருளும். அதற்காக மன்றாடுவோம்!




## வெள்ளை நிறத்தொரு பூனை



வெள்ளை நிறத்தொரு பூனை
எங்கள் வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை
அவை பேருக்கொரு நிறம் ஆகும்

சாம்பல் நிறத்தொரு குட்டி
கரும் சாந்தின் நிறம் ஒரு குட்டி
பாம்பின் நிறமொரு குட்டி
வெள்ளை பாலின் நிறம் ஒரு குட்டி

எந்த நிறமிருந்தாலும்
அவை யாவும் ஒரே தரம் அன்றோ
இந்த நிறம் சிறிதென்றும்
இஃது ஏற்றம் என்றும் சொல்லலாமோ

வண்ணங்கள் வேற்றுமை பட்டால்
அதில் மானுடர் வேற்றுமை இல்லை
எண்ணங்கள் செய்கைகள் யாவும்
இங்கு யாவர்க்கும் ஒன்றென காணீர்!

## நரியின் குல்லா



குளிருக்கு அணிந்திட குல்லா கேட்டு நல்லான் குள்ள நரியும் வந்தது. மெலிதாய் வாழை மட்டை கிடைத்தால் அழகாய் குல்லா செய்து தருவேன் என்றே குருவி சொல்லக் கேட்டு நல்லான் நரியார் வாழைத்தோப்பில் நுழைந்தது. இளகிய மட்டையை இழுத்துப் பார்த்தது. கைவழுகிட தவறி கீழே விழுந்தது. நல்லான் நரியார் விழுந்தது கண்டு ஓணான் வந்து ஓங்கி சிரித்தது. ஓணான் சிரிக்க வாழை மரமோ அதிரபழுத்த வாழைப்பழங்களில் சில விரைந்து உதிர்ந்தன. உதிர்ந்து பழங்களை உரித்து தின்ன குரங்குகள் கூட்டம் வந்தன. அங்கே குரங்கு கூட்டம் புகுந்ததாலே வாழை மட்டைகள் எல்லாம் கிழிந்து போயின. மெல்லிய மட்டை இல்லா நிலையில் குல்லா செய்யும் நரியின் ஆசை மெல்ல கரைந்தது, மேற்கு திசையில் நிலவும் வந்தது.

## தக்க நேரத்தில் உதவி செய்

பள்ளத்தூர் என்ற ஊரில் கன்னியப்பன் என்ற வியாபாரி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தன்னுடைய வியாபாரத்திற்கான பொருட்களைச் சுமப்பதற்கு கழுதை யையும், வழிப்பயணத்தின் போது பாதுகாப்பிற்காக நாயையும் வளர்த்து வந்தார். ஒருசமயம் வியாபாரத்திற்காக, பொருட்களையும் உணவினையும் கழுதையில் ஏற்றிக் கொண்டும், நாயை அழைத்துக் கொண்டும் சென்றார். பயணத்தின் இடையில் களைப்படைந்த, கன்னியப்பன் கழுதை யை புல் மேய விட்டுவிட்டு, அருகில் இருந்த மரத்தடியில் படுத்து உறங்கினார். கழுதை புற்களை வயிறார மேய்ந்தது. பயணக் களைப்பாலும் தின்பதற்கு ஏதும் இல்லாததாலும் நாய் பசியால் மிகவும் வாடியது. பசி வயிற்றை கிள்ளியதை உணர்ந்த நாய் கழுதையிடம் “ நண்பனே, எனக்கு மிகவும் பசிக்கிறது. நமது எஜமானரோ நன்கு படுத்து உறங்குகிறார். நீ கொஞ்சம் சாய்ந்து படுத்துக் கொள். உன் முதுகில் உள்ள உணவு மூட்டையிலிருந்து சிறிது உணவை எடுத்து நான் உண்கின்றேன்” என்றது.

ஆனால் கழுதையோ, நாயின் பேச்சினை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. உண்பதிலேயே கவனத்தைச் செலுத்தி வயிறார புற்களை தின்று கொண்டிருந்தது. நாயும் விடாமல் கழுதையிடம் கெஞ்சியது. நாயின் கெஞ்சல் கழுதை யை எரிச்சல் படுத்தியது. உடனே அது எரிச்சலுடன் “ ஏன் அவசரப்படுகிறாய்? நமது எஜமாசனர் உறங்கிக் கொண்டிருக்கிறார். அவர் விழித்தெழுந்து உண்ணும் போது உனக்கும் உணவு தருவார். அதுவரை நீ ஏன் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறாய். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது உனக்கு தெரியாதா?” என்று கேட்டது. நாயுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தது. பின்னர் பசியுடன் அது சோர்ந்து படுத்தது. கழுதை, நாயை கண்டு கொள்ளாமல், புற்களை மேய்ந்து கொண்டே இருந்தது. சற்று நேரத்தில் அவ்வழியே ஓநாய் ஒன்று வந்தது. அதனைப் பார்த்ததும் கழுதை நாயிடம் “ நண்பனே, சீக்கிரம் ஓடிவந்து என்னைக் காப்பாற்று.” என்று பதறிக் கூறியது. நாயோ “ ஏன் பதறுகிறாய் நண்பா? கொஞ்சம் பொறுமையாக இரு. உறங்கும் எஜமானர் இன்னும் கொஞ்ச நேரத்தில் எழுந்து இங்கே வருவார். அவர் நிச்சயம் உனக்கு உதவி செய்வார்.” என்று அமைதியாகக் கூறியது. பிறருக்கு உதவி தேவைப்படும் சமயத்தில் நாம் உதவினால்தான், நமக்கு தக்க நேரத்தில் உதவி கிடைக்கும் என்ற உண்மையை அறிந்து கொணடது.

# யாழ்ப்பாணத்துப் புதுமை மாதா வரலாறு




இலங்கை மக்களுக்கு– விசேஷமாக யாழ்ப்பாணத்தவர்க்கு உரிமைப் பொருளாய் இன்றும் இந்திய கோவை நகரில் (புழய) இருப்பது, யாழ்ப்பாணப் புதுமைமாதா சுரூபமாம். இச்சுரூபம் யாழ்ப்பாணக் கத்தோலிக்க சரித்திரத்தின் ஆஸ்பதமாயுள்ளது. எங்களுக்குக் கண்மணி போன்றது. போர்த்துக்கேயரின் ஆட்சி முடிவுற்று ஒல்லாந்தரின் ஆட்சி ஆரம்பமானதும் இச்சுரூபம் யாழ்ப்பாணத்திலிருந்து கோவைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

புதுமைமாதா கோவில் மிகப்புராதனமானது. 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டது. போர்த்துக்கேயர் 1580ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். உடன் ஒரு கோட்டையைக் கட்டினர். தேவதாய்க்கு அக்கோட்டைக்குள்ளேயே ஒரு கோவிலையும் (1662–ல்) அமைத்தனர். அக்கோவிலைப் புதுமை மாதாவுக்கு அர்ப்பணித்தனர். புதுமை பல நிகழ்ந்ததாகக் கருதப்படும் மரத்திற்செதுக்கப்பட்ட சுரூபத்தைக் கோவிலில் எழுந்தேற்றஞ் செய்தனர். இப்புதுமை மாதாகோவிலே யாழ்ப்பாணத்திற் கட்டப்பட்ட முதற் கத்தோலிக்க ஆலயமாகும். இப்புதுமை மாதாவைத் திருமறை மக்கள் கோட்டை மாதா என்றும், பட்டிணத்து மாதா என்றும், யாழ்ப்பாணத்து மாதா என்றும் வெவ்வேறு பெயரிட்டுத் தொழுதுவந்தனர்.

யாழ்ப்பாணத்தில் பெருமக்கள் வாழ்ந்துவந்த பகுதி முன்பு சீதாரி (பறங்கித்தெரு) என அழைக்கப்பட்டு வந்தது. இப்பகுதியையடுத்து அமைந்திருந்த இக்கோவில் சீதாரிமாதா கோவில் என்றும் அறியப்பட்டு வந்தது. யாழ்ப்பாண நாட்டிலுள்ள கத்தோலிக்க மக்களனைவரினதும் பொது அரச ஆலயமாக விளங்கிவந்தது இப்பேராலயமே.

இதில் சமய ஆராதனைகள் பகிரங்கமாகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தன. கத்தோலிக்கரான போர்த்துக்கேயருடன் பிறமதக் கொள்கையாளான ஒல்லாந்தர் சண்டையிட்டு, வெற்றியுற்று, 1658–ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் கோட்டையைவிட்டுச் செல்லும்போது, புதுமைமா சுரூபத்தையும் கூடஎடுத்துச் சென்றனர்.

எங்கள் புதுமை மாதா சுரூபம் தற்போது இந்தியாவின் கோவை நகரிலுள்ள சம்பேதுரு ஆலயத்தில் பூச்சியமாக வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகிறது. இது மிகப் பக்தியருட்சியானது. இச்சுரூபம் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் கொண்டு வரப்படக் கத்தோலிக்க மக்களெல்லோரும் பெருமுயற்சி செய்ய வேண்டும். இதுவிஷயமாய் பல வருடங்களுக்கு முன்பே முயற்சிகள் எடுக்கப்பட்டன எனினும், அவை பலனளித்ததாகத் தெரியவில்லை. யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவரவர்கள் பழைய புதுமைமாதா சுரூபத்தைக் கோவையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளை எடுப்பாரென நம்புகிறேன்.

கரைநகரைச்சேர்ந்த (குருநகர்) கத்தோலிக்க மக்கள், கோட்டைப் புதுமை மாதா கோவிலின் ஞாபகமாக, அயலில் புதிய ஓர் ஆலயத்தைக்கட்டி, ஒரு புதிய புதுமைமாதா சுரூபத்தை நிறுவி வழிபாடு நடத்திவந்தனர். இப்புதிய அலயமே தற்போது யாழ்ப்பாணப் புதுமை மாதா கோவில் என அறியப்படுகிறது.

## இறைவார்த்தை

**அஞ்ச வேண்டாம், நீங்கள் இக்குற்றங்களை எல்லாம் செய்திருப்பினும் ஆண்டவரைப் பின்பற்றுவதிலிருந்து விலகாமல் அவரையே உங்கள் முழு மனத்தோடு வழிபடுங்கள். தம் மாபெரும் பெயரின் பொருட்டு ஆண்டவர் தம் மக்களைப் புறங்கணிக்கமாட்டார். ஏனெனில், உங்களை தம் மக்களாக்க அவரே திருவுளங் கொண்டார். (1 சாமுவேல் 12:20,22)**

# மாற்றம் ஒன்றே மாறாதது

**( ஆன்மீகஉண்மைச் சிறுகதை)**

இயேசுவுக்கு மிகவும் பிரியமான இறைவாக்கினருள் ஒருவரான யோனா இறைவாக்கினர் அன்று இரவு உறங்கிக்கொண்டிருந்த போது "நீ எழுந்து நினிவே நகருக்கு போ" அந்த நகரவாசிகள் செய்யும் அனைத்து தீங்கான காரியங்களும், அடாவடித்தனங்களும் என்னால் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு எல்லை மீறிவிட்டது. எனவே! அவர்கள் மனமாற்றம் பெற்று சகல தீமையான காரியங்களிலும் இருந்து விலகி இறைவனுக்கு ஏற்புடையோராய் மாறாது விட்டால் இன்னும் (40) நாற்பது நாட்களில் அந்த நகரையே அழித்து விடுவேன் என்பதை இன்றே போய் சொல் என்ற ஆண்டவரின் குரல் கேட்டு விழித்துக் கொண்ட யோனா, நினிவே நகரமா? நான் அங்கு போகையிலே பொல்லாத துட்ட ரெல்லாம் பதுங்கி இருந்து என்னைத் தாக்கி விட்டால் பாவி நான் பரிதவித்தே அங்கு மாண்டிடுவேனே என்று புலம்பிய வாறு தன் பயணப் பையை எடுத்துக்கொண்டு துறை முகம் நோக்கி நடக்கின்றார்.

துறை முகத்தை அண்மித்ததும் தர்சீசுக்கு புறப்பட தயாராக நின்ற கப்பலைக் கண்டு, ஆண்டவரிடம் இருந்து தப்பித்துக் கொள்ள "இதுவே தகுந்த காலம் என்று நினைத்தாரோ என்னவோ, ஒரு பற்றுச்சீட்டை பெற்றுக் கொண்டு அக் கப்ப லின் அடித்தளத்தின் ஓரமாக உறங்கிக்கொள்கிறார்.

கப்பல் தர்சீசுக்கு புறப்பட்ட சில மணி நேரத்தில் கப்பல் உடையும் அளவுக்கு பெரும் காற்றும் மழையும் பெய்தது. பயணிகள் தாங்கள் கொண்டு வந்த பொருட்களை கடலில் எறிந்து கப்பலின் பளுவை குறைக்க முயன்ற போதும் முடியாமல் போகவே! ஒவ்வொரு பயணிகளும் தாங்கள் வழிபடும் தெய்வங்களை நோக்கி இத்தீங்கில் இருந்து தப்பிக்க ஜெபித்தும் நிலமை தீவிரம் அடைந்தே தவிர குறைந்தாக இல்லை.

அப்போது இந்த தீங்கு யாரால் வந்தது என்று அறிய பயணிகளுடைய பெயர்களை எழுதி சீட்டு போட்டு பார்த்தார்கள்.(அக்கால நடைமுறை) சீட்டு துண்டில் யோனா என்று இருக்கவே, அவரை தேடி கப்பலின் அடித்தளத்துக்கு வந்து பார்த்தால் நடந்தது எதுவுமே தெரியாமல் யோனா உறங்கிக்கொண்டிருந்ததை பார்த்தவுடன் « எழுந்திரு உன் இனம் எது? மொழி எது? நீ யார்? உன் தொழில் என்ன? நீ எந்த கடவுளை வழிபடுகிறவன். நாம் யாவரும் மடியப்போகிறோம் உன் கடவுளை வேண்டிக்கொள். ஒரு வேளை உன் கடவுளாவது எம்மை காப்பாற்றி விடலாம் » என்றார்கள்.

« நான் ஒரு எபிரேயன். விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய கடவுளாகிய ஆண்டவரை வழிபடுபவன் நான் அவரின் பார்வையில் இருந்து தப்பித்துக் கொள்ள இங்கே வந்தேன் » என்றார் இதைக் கேட்டதும் அவர்கள் மிக அச்சமுற்று « நீ ஏன் அவ்வாறு செய்தாய்? கடலின் கொந்தளிப்பை இப்போது எப்படி குறைப்பது? » என்று அவர்கள் கேட்கவும் என்னைத் தூக்கிக் கடலில் வீசுங்கள். நீங்கள் பிழைத்துக் கொள்ள இதுதான் ஒரே வழி என்றார்.

ஆனால் இவரைக் காப்பாற்ற பல முயற்சிகள் செய்தும் அவர்களால் முடியாமற் போகவே !ஆண்டவரே! குற்றம் இல்லாத ஒருவரை தண்டித்ததாக எங்களை அழியவிட வேண்டாம். உமது திருவுள்ளத்தின் படியே இவ்வாறு நடக்கிறது என்பதை அறிகிறோம் என்று மன்றாடியபின் யோனாவை தூக்கி கடலில் வீசினார்கள். அப்போதே.. கடலில் நிறைந்திருந்த அனர்த்தங்கள் அமைதியானது பயணிகள் அனைவரும் தாங்கள் போகவேண்டிய ஊர்களை அடைந்தார்கள். கடலில் வீசப்பட்ட யோனாவைக் காப்பாற்ற ஆண்டவர் ஒரு மீனை அனுப்பவும், அந்தமீன் தன் வாயை திறந்து யோனாவை உள்வாங்கி மூன்று நாள் இரவு பகலாக வைத்திருக்கிறது. மீனுடைய வாயுக்குள் அகப்பட்டுள்ள யோனாவின் மனநிலை எப்படி இருந்திருக்கும்???

ஆண்டவரே! என்னை காப்பாற்ற விரைந்து வாரும். என்று மன்றாடியதுடன். திருப்பாடல்கள்15 ம் திருவசனத்தின்படி துன்ப வேளையில் என்னைக் கூப்பிடுங்கள் –உங்களை காத்திடுவேன். அப்போது நீங்கள் என்னை மேன்மை படுத்துவீர்கள் என்று சொன்னீரே! ஆண்டவரே என்னை காப்பாற்ற விரைந்து வாரும் என்று ஜெபித்துக் கொண்டே இருந்தார். 3 ம் நாள் ஆனது ஆண்டவரின் கட்டளைக்கு ஏற்ப மீன் இவரை பத்திரமாக கரை யேற்றியது. பின்பு ஆண்டவரின் கிருபையினால் மனமாற்றம் பெற்ற யோனா இறைவாக்கினர் ஆண்டவரின் வாக்கை நிறைவேற்ற நினிவே நகருக்கு பயணமாகின்றார்.

இக் கதையானது. ஒன்று (1) ஆண்டவரின் பார்வையில் இருந்து யாரும் தப்பிக்க முடியாது. இரண்டு(2) எம் தவறுகளை அடுத்தவர் மீது திணிக்கக்கூடாது என்பதையும் தெளிவுபடுத்துகிறது. அந்த கப்பலில் பயணம் செய்த பயணிகள் யாவரும் உயிர் பிழைத்துக் கொண்டனர்.

எனவே! நேற்றும், இன்றும், என்றும் எம்மை நீதியின் பாதையில் வழி நடத்தும் ஆண்டவரின் குரலுக்கு செவி சாய்ந்தவர்களாய் வாழ மனமாற்றமே முக்கியத்துவம் பெறுகிறது என்பதை உணர்ந்தவர்களாய் வாழ்வோம்.

என்றும் உங்கள் பாசத்துக்குரிய – **லூசியா அன்ரி**

# பப்பாளியின் மருத்துவ குணங்கள்



பாப்பாளி தற்போது எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் பழம். மலிவானது. இனிப்பானது. எல்லோரும் அறிந்தது. சத்துக்கள் மிகுந்தது. மஞ்சள், சிவப்பு நிற பழங்களாகவும், சில சமயம் பச்சை கலந்த நிறத்திலும் உள்ளது. இதில் வைட்டமின் ஏ உயிர் சத்து நிறைய இருக்கிறது. பல் சம்மந்தமான குறை பாட்டிற்கும், சிறுநீர்ப்பையில் உண்டாகும் கல்லை கரைக்கவும், பப்பாளி சாப்பிட்டால் போதும்.

நரம்புகள் பலப்படவும், ஆண்மை தன்மை பலப்படவும், ரத்த விருத்தி உண்டாகவும், ஞாபக சக்தியை உண்டு பண்ணவும் பப்பாளி சாப்பிடுங்கள். அடிக்கடி பப்பாளி பழத்தினை உண்டு வருபவர்கள் எவ்வகை நோய்க்கும் ஆளாக நேரிடாது. எந்த வகையான தொற்று நோய் பரவினாலும், அது இவர்களை தாக்காது. பப்பாளி பழத்தில் இயற்கையாகவே விஷக்கிருமிகளை கொல்லும். பப்பாளி பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுத்து வர உடல் வளர்ச்சி துரிதமாகும். எலும்பு வளர்ச்சி, பல் உறுதி ஏற்படும்.

பப்பாளிக் காயை கூட்டாக செய்து உண்டு வர குண்டான உடல் படிப்படியாக மெலியும். தொடர்ந்து பப்பாளிப் பழத்தை சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும். பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி குறையும். நன்கு பழுத்த பழத்தை கூழாக பிசைந்து, தேன் கலந்து முகத்தில் பூசி ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் மாறி, முகம் அழகு பெறும்.

பப்பாளி விதைகளை அரைத்து பாலில் கலந்து சாப்பிட நாக்குப்பூச்சிகள் அழிந்து விடும். பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண், புண்கள் மேல் பூச புண்கள் ஆறும். பப்பாளிப் பாலை, பசும்பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வர புண்கள் ஆறும். பப்பாளிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வர புண்கள் ஆறும். பப்பாளி இலைகளை அரைத்து கட்டி மேல் போட்டு வர கட்டி உடையும். பப்பாளி விதைகளை அரைத்து, தேள் கொட்டிய இடத்தில் பூச வலி விஷம் இறங்கும்.

பப்பாளிக் காய் குழம்பை, பிரசவித்த பெண்கள் உணவில் சேர்த்து வர பால் சுரப்பு கூடும். 100 கிராம் பச்சைக் காயான பப்பாளியில் 32 மில்லி கிராமும் நன்றாகப் பழுத்ததில் 68 முதல் 136 மில்லி கிராமும் வைட்டமின் சி இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பழுக்காத பச்சைப் பப்பாளித் துண்டுகள் அல்லது சாறை அருந்தினால் குடலிலுள்ள வட்டப்புழுக்கள் வெளியேறும்.

கல்லீரல் கோளாறுகளுக்கும் பப்பாளி மருத்துவ ரீதியாக உதவி சரிசெய்யும். முறையான மாதவிலக்கு ஒழுங்குக்கு பப்பாளி உண்பது சரியான வழி.

அடிவயிற்றுப் பிரச்னைகளுக்கு பப்பாளியே மிகச் சிறந்த மருந்து. வயிற்றுக் கடுப்பு செரிமானமின்மை அமிலத்தொல்லை மலச்சிக்கல் இவற்றுக்கெல்லாம் அருமருந்து பப்பாளி. முகப்பரு உள்ளவர்கள் பப்பாளிக்காயின் நறுக்கிய உட்பகுதித் துண்டுகளை மென்மையாக முகத்தில் தேய்க்க வேண்டும். இது முகப்பருக்களைப் போக்கி முகச் சுருக்கங்களையும் நீக்கி பொலிவு கூட்டும்.

பப்பாளியின் இலையில் ஆன்டி–மலேரியல் மற்றும் ஆன்டி–கேன்சர் பொருட்கள் உள்ளதால் இதன் சாற்றை மலேரியா மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சாப்பிட்டு வந்தால் உடலில் இருக்கும் அந்த நோய் பாதிப்பை குறைக்கலாம்.


தினமும் நாம் பப்பாளி இலைச் சாற்றினை சிறிய அளவில் குடித்து வந்தால் அது நமது உடம்பின் நோய் எதிர்ப்பு திறனை அதிகரிக்கச் செய்து, உடல் சோர்வு போன்ற பிரச்சனைகளை தடுக்கும். வயிற்றில் ஏற்படும் செரிமான பிரச்சனை, ஒவ்வாமை, அலர்ஜி போன்ற சரும பிரச்சனை, ஒழுங்கற்ற மாத விடாய் சுழற்சி, நீரிழிவு மற்றும் பக்கவாதம் போன்ற பல பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வாக உள்ளது.

பப்பாளி இலையை நன்றாக அரைத்து தேங்காய் எண்ணெயில் சேர்த்து தைலம் போல் காய்ச்சி வடிகட்டி அந்த எண்ணையை தினமும் தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் பொடுகு தொல்லை நீங்கும். படர் தாமரை என்று உடல் இடுக்குகளில் ஏற்படும் தோல் பிரச்னைக்கும் பப்பாளி இலையை அரைத்து பூசினால் நல்ல குணம் கிடைக்கும். பப்பாளி விதை உட்கொள்வதால் கல்லீரல் குடல் புழுக்கள் மற்றும் டெங்கு போன்ற நோய்களிலிருந்து குணம் பெறலாம். நலம் நாடும் நல்உள்ளங்கள் தொடர்ந்து பப்பாளியை பயன் படுத்தி வாழ்வில் நலமும் வளமும் பெருக.



# யாழ்ப்பாணம் சில்லாலையிற் காணப்படும்

## ✝ அற்புத சிலுவையின் வரலாறு



யோசேவாஸ் முனிவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது மாறுவேஷத்துடன் வீடுவீடாய்த் திரிந்து பிச்சை எடுத்துவந்தார். ஆரம்பத்தில் அவரை. இன்னாரென அறிவது. இலகுவாய்த் தோன்றவில்லை. சிலகாலத்தால் கத்தோலிக்கர் அவர் ஒரு குருவென அறிய வந்தபோது, ஒல்லாந்தரால் அவருக்கு ஆபத்துண்டாகுமென எதிர்பார்த்து அவரைச் சில்லாலை என்னும் சிற்றூருக்கு அனுப்பி வைத்தனர். அவ்வூரார்களுடைய உறுதியான விசுவாசத்தாலும், சுத்ததனத்தாலும் அவ்வூர் "சின்ன றோமை" என அழைக்கப்பட்டது. பறங்கியர்களால் அமைக்கப்பட்ட மண் ஆலயம் ஒன்றும் அப்போது அங்கு காணப்பட்டது.

அவ்வூரிலிருந்த மூப்பருக்குக் கீழ்ப்படிந்துகொண்டே முனிவர் பல மைல் தூரம் கால்நடையாக நடந்துசென்று, பரந்த இடங்கள்தோறும் வேதவெளிச்சத்தை ஏற்றி வைத்துக்கொண்டு வந்தார். அவருடைய அமிர்தமான வாக்கியங்களைக் காட்டிலும் அவருடைய சுகிர்த நடத்தை பலரை வேதசத்தியத்துக்கு அழைத்து வந்தது. (யோ. மு. சரி . ப. 68)

**★ அற்புத சிலுவை**

தங்கச்சரிகையால் வேலைசெய்யப்பட்ட "வெல்வெற்" மெத்தையின் மீது பூச்சிய பயபக்தியுடன் அந்த அற்புத சிலுவை ஒரு சின்னஞ்சிறு வீட்டில் வைக்கப் பட்டிருக்கிறது. செம்பு உலோகத்தால் செய்யப்பட்ட அச்சிலுவையின் நீளம் நாலரை அங்குலமிருக்கும். சாதாரணமாக நாம் காணும் சிலுவைகளைப்போல அச்சிலுவையும் ஒரே குறுக்குச்சட்டம் வைத்து அமைக்கப்படாமல் இரண்டு குறுக்குச்சட்டங்களால் பொருத்தப்பட்டிருக்கிறது. அவற்றின் அந்தங்கள் பூவேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. அதைத் தங்களுடைய அரிய பிதிரார்ச்சித சொத்தாக அவர்கள் பேணிக் காப்பாற்றி வருகின்றனர். உயிரைப்பிரிந்தாலும் அச்சிலுவையைப் பிரிய அவர்கள் தயங்குவார்கள்.

அச்சிலுவையால் அற்புதமாக நோயாளிகள் குணப்பட்ட வரலாறுகள் பல கூறப்பட்டு வருகின்றன. சுமார் முந்நூற்று முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் சில்லாலையில் ஞானச்சுடர் ஏற்றிய முனிவர் அவர்களின் அழியாத ஞாபகமாக அச்சிலுவை காணப்படுவது நமக்குப் பெருமையளிக்கும் விஷயமாகும்.

அற்புதமான அந்தச் சிலுவையைப் பற்றிய வரலாறு மிகக் கவர்ச்சியானது. அந்நாட்களில் மாதகல் துறை தொடக்கம் திருவடிநிலை ஈறாகவுள்ள கடல்வரியை வசூலிக்கும் பொறுப்பு காயர் பிறஞ்சிப்பிள்ளை என்பவருக்கே இருந்தது. அவர் சில்லாலையில் தனவந்தராகவும், நாட்டாண்மைக்காரராகவும் இருந்து வந்தார்.

ஞாயிற்றுக்கிழமையைத் தவிர ஏனைய நாட்களில் அவருக்குத் தலைகொள்ளா வேலைகள் இருந்தமையால், தம்முடைய வீட்டு வேலைகளை ஞாயிற்றுக்கிழமையிலேயே கவனிப்பது அவருடைய வழக்கமாய் இருந்தது. இதையிட்டுப் பலமுறை முனிவர் கண்டித்தும் காயர் பிறஞ்சிப்பிள்ளையின் காதுகளில் அவை ஏறவில்லை.

அவருடைய எட்டுச்சார்வீட்டை வேய்வதற்காகத் தபசுகாலத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் கூலியாட்கள் வந்து குழுமினர். வீடு வேயும் வேலை ஆரம்பமாயிற்று. முனிவருக்கு மூப்பர் இதைக் கூறியபோது அவர் மனம் வருந்தி, "அவனுடைய சம்பாத்தியம் எல்லாம் நெருப்பாய்ப் போகப் போகிறதே!" என்றார்.

வீடு தீப்பற்றிக்கொண்டது. வேலையாட்கள் நெருப்புப்பிடித்த பகுதியை அகற்றிவிட்டுத் திரும்பவும் வீடு வேய ஆரம்பித்தபோது முன்போலவே தீப்பிடித்தது. இவ்வாறு மூன்று முறை நடைபெறவே அவருடைய பொருட்கள் சேதமாயின.

உணர்ச்சிவந்த பிறஞ்சிப்பிள்ளை அப்போது முனிவரிடம் ஓடிச்சென்று குறையிரந்து மன்னிப்புக் கேட்டார். யோசேவாஸ் முனிவர் அவரை ஆசீர்வதித்து ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்யக்கூடாதெனப் புத்தி புகட்டி, இந்த அற்புதமான சிலுவையை அவர் கையில் கொடுத்து, "இது உன்னோடிருக்கும் வரையும் உனக்கு ஒருகுறையும் வராது" என்று தேற்றியனுப்பினார். அவரும் அதை அருந்தனம்போலக் காப்பாற்றி மரணவேளையில் அதை அணைத்துக்கொண்டு தானே மரித்தார். இச்சிலுவையே அவருடைய சந்ததியாரிடம் இப்பொழுது காணப்படும் அற்புத சிலுவையாகும்.






இரண்டு நண்பர்கள் அரசுப்பணித் தேர்வுக்காக "தங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தனர் . முதல் நண்பன் மிகவும் திறமையானவன், அறிவாற்றலில் முதிர்ந்தவன், சிறுவயதிலிருந்தே படிப்பில் தேர்ந்தவன். தனது படிப்பாற்றலில் அதீத நம்பிக்கை வைத்தவன். ஆனால் "எனக்கு எல்லாம் தெரியும் என்ற மமதையுடன் ஒவ்வொரு நாளையும் வெறுமனே கடத்திக் கொண்டிருந்தான். "நாளை படித்துக் கொள்ளலாம் என்று நாட்களை வீணாக்கினான். இரண்டாம் நண்பனோ அறிவில் சிறிது குறைந்தவன், ஒவ்வொரு நாளும் முக்கியம் என்பதை உணர்ந்தவன். விடாமல் படிக்க ஆரம்பித்தான், படிப்பதையே பழக்கமாக்கினான். படிக்கப் படிக்க, அவனது அறிவாற்றல் வளர்ந்தது, சிந்தனைகள் தெளிவானது, படித்தவை ஆழ்மனதில் பதிந்தது. நாட்கள் நகர்ந்தோட, படிப்பில் கவனம் செலுத்தியவன். தன்னை தயார் நிலையில் வைத்துக்கொண்டான். தேர்விற்கு முந்தைய நாள், முதல் நண்பன், இரவு முழுவதும் விடாது படிக்க, காலையில் எழுவதற்கு தாமதமாகி, தேர்விலும் கோட்டைவிட்டான். இரண்டாம் நண்பனின் தினசரி தயாரிப்பு அவனுக்கு தோள் கொடுத்தது, தேர்வும் கைகொடுத்தது, வெற்றியைத் தனதாக்கினான். இடைவிடாது படித்தப் பழக்கம், அவனை மீண்டும் படிக்கத் தூண்டி, அதுவே அவனது வழக்கமாக, வாழ்க்கையில் உயர்ந்த இடத்திற்கே சென்றுவிட்டான். ஒவ்வொரு நாளும் படிக்க, அதுவே பழக்கமாக, நல்ல வழக்கமாகவும் மாறி, பிறகு அதுவே வாழ்க்கையை உயர்ந்த நிலைக்கு நம்மை கொண்டு செல்லும் என்பதை இந்த நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது.

இதுபோன்ற பழக்க வழக்கங்கள் நமது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளை அலங்கரிப்பதை மறுக்கமுடியாது. ஒவ்வொரு நாளும் நாம் என்ன செய்கின்றோமோ, அதுவாகவே நாம் மாறிவிடுகின்றோம். காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எழுந்து பழக்கப்பட்டவர்கள், தூங்குவதற்கு அதிக நேரம் கிடைத்தாலும், அந்த குறிப்பிட்ட நேரத்தில் விழித்துவிடுவது வழக்கம். வேலைக்குச் செல்பவர்கள், தினம் தினம் தாமதமாக செல்வார்களே என்றால், "நேரம் தவறாமை அவர்களுக்கு எட்டாக் கனியாகவே மாறிவிடும். அதுபோலவே, நமது சிந்தனைப் பழக்கத்தைப் பொறுத்தே, செயல் வழக்கமும் இருக்கும். எதிர்மறைச் சிந்தனைகளை நினைத்துக்கொண்டிருந்தால், நமது செயல்களும் எதிர்மறையாகவே மாறிவிடும் நேர்மறைச் சிந்தனைகளைப் பழக்கமாக்கினால், நம்மை உந்தித் தள்ளி, உயரப் பறக்கவைக்கும் செயல்கள் நமது வாழ்க்கையாகும். தீயச் சொற்களைப் பேசிப் பழகியவர்கள், தங்களை அறியாமலேயே தங்களது உரையாடலில் அவற்றை பயன்படுத்துவது தவிர்க்க முடியாத வழக்கமாக மாறிவிடுகிறது.

ஒரு சில தீய பழக்கவழக்கங்களும் நம்மை தீமையின் பிடியில் சிக்கித் தவிக்க வைத்து விடுகிறது. புகைப்பிடித்தல், மதுப்பழக்கத்துக்கு அடிமையாதல் போன்றவை, சிறு பழக்கமாகத் தொடங்கி, பிறகு வாழ்க்கையின் தவிர்க்க முடியாத வழக்கமாக மாறி, ஒருவனை ஆட்டிப்படைக்கும் சங்கடங்களாக வலம் வருகின்றன. இதுபோன்ற எடுத்துக்காட்டுகள் நமது வாழ்க்கையில் ஏராளம். ஒவ்வொன்றிற்கும் அடித்தளம் என்னவென்றால், நமது தினசரி பழக்கங்களே வாழ்க்கையின் வழக்கங்களாகும் என்பதே. ஆகவே, நம்மிடம் இருக்கும் பழக்கங்களை அலசிப்பார்ப்பது சாலச் சிறந்தது.

கடந்த காலத்திலிருந்த சிறுசிறு நேர்மையற்ற நடை–முறைகள் முதல், இன்று அரங்கேறும் கலாச்சார சீர்கேடுகளை அள்ளி வீசும் வழக்கங்கள் அனைத்துமே, நடைமுறைப் பழக்கங்களை மாற்றியதால் வந்த மாற்றங்களே என்பதை நம்மால் மறுக்க முடியாது. கூடிவாழ்ந்த சமூகம் இன்று கூடலுக்காக ஏங்கித் தவிப்பது, குடும்பத்திலிருக்கும் மற்றவர்களை தவிர்க்கும் எண்ணத்தோடு தனிக்குடித்தனம் அமைத்த பழக்கத்தினால் அரங்கேறுகிறது பகிர்ந்து வாழ்ந்த சமுதாயம் இன்று பகிர்தலையே பாரமாகப் பார்ப்பது, தனித்தனியாக வாழப் பழகிக் கொண்டதால் நடைமுறையா–கிறது அறத்தை முதலில் வைத்த மனிதம், இன்று அநீதியை தலைமேல் வைப்பது, சொகுசு என்ற பழக்கத்திற்கு அடிமையானதால்தான். ஆக, ஒரு செயலை ஒவ்வொரு முறையும், திரும்பத் திரும்பச் செய்வதால், பழக்கமாகி, அந்த பழக்கமே நமது வழக்கமாகிவிடுகிறது. நல்ல பழக்கம் என்றால் மகிழ்ச்சி, ஆனால் அதுவே தீய பழக்கமென்றால் என்ன செய்வது?

தீய வழக்கங்களை எப்படி மடைமாற்றம் செய்வது? குடிப்பழக்கத்திற்கு அடிமையானவன் எப்படி அந்த வழக்கத்திலிருந்து வெளியே வர முடியும்? அதன் தொடக்கத்திற்கு சென்றால் விடை கிடைக்கும். பிறக்கும்போது எவரும் தீமையான பழக்கங்களோடு பிறப்பதில்லை தீய பழக்கங்கள் ஒரே நாளில் நம்மில் குடிகொள்வதும் இல்லை. மாறாக, சிறிது சிறிதாகத் தொடங்கிய ஒரு சில பழக்கங்கள், ஒருவன் வாழ்வின் வழக்கமாக மாறி, பிறகு அடிமை நிலைக்குச் சென்றிருப்பது உறுதி. தீய வழக்கங்களிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டுமென்றால், இன்றைய நிலையிலிருந்து, சிறிது சிறிதாக தொடக்க நிலைக்குச் செல்வோம். தொடக்க நிலைக்குச் செல்வது என்பது தீய செயல் ஒன்றை ஏழு முறை செய்கிறோம் ,............

மிகுதி 19ம் பக்கம்

18ம் பக்கத் தொடர்ச்சி

என்றால், ஐந்து முறை செய்யப் பழகுவோம், பிறகு மூன்று, இரண்டு, ஒன்று என்று தொடங்கிய நிலைக்கு செல்லும் பழக்கத்தை வழக்கமாக்குவோம். தொடக்க நிலைக்கு வந்த பிறகு புதிய பழக்கங்களை, நமக்கு நன்மை பயக்கும் பழக்கங்களை வழக்கமாக்குவோம். ஆம்! நமது வாழ்க்கைக்கு புதிய முன்னுரை எழுத வேண்டுமா? தீய வழக்கங்களின் தொடக்க நிலைக்குச் செல்வோம்! பழைய பழக்கங்களை மாற்றுவோம்! புதிய பழக்கங்களைத் தொடங்குவோம்! பழக்கமே பிறகு வழக்கமாகும்!

- என்னங்க.. வைர நெக்லஸ் ஒண்ணு நீங்க வாங்கித் தர்ற மாதிரி நேத்து கனவு கண்டேன். "அதை கழுத்துல போடுற மாதிரி இன்னிக்கு கனவு கண்டுடு சரியாகிடும்..
- என்னங்க.. பையன் பாக்கெட்டுல காசு வைக்கறீங்க..? பசங்க கையில் பணம் கொடுத்தா கெட்டுப் போயிடுவாங்க.. அதான்..
- உன் தங்கச்சி சிங்கப்பூருக்கு ஹனி மூன் போய்ட்டு வந்தாளே.. என்ன வாங்கிட்டு வந்தா.. ரெண்டு மாசம் போனா தன்னால தெரியுமுங்க..
- எதுக்குங்க வீட்டு வாசலில் அடியாள் வைச்சிருங்கீங்களே..
  கடன் வசூலுக்கு வர்றவங்களை விரட்டி அடிக்கதான்..
- எதுக்குய்யா.. குடிச்சிட்டு கூடவே ஒரு பொம்பளையும் கூட்டியாந்திருக்கே..
  நான் பேசுற இங்கிலீஷை உனக்கு மொழி பெயர்க்கத்தான்டி....
- நேத்து ஆபிஸ் போனிங்க.. ஆனா இன்னிக்குதான் வீட்டுக்கு வர்றீங்களே..
  நான் பாட்டுக்குத் தூங்கிட்டேன். என்னை யாரும் எழுப்பலை அதான்..
- என்னோட கண்ணை நல்லா பாரு.. என்ன தெரியுது..
  உங்க உண்மையான அன்பு தெரியுதுங்க..? அது இல்லை. கண்ணுல தூசி விழுந்திருச்சி. அதான்..

## 'தூய வாழ்வுக்குக் கிடைக்கும் கைம்மாறு'

**நற்செய்தி சிந்தனை**

அந்தப் பெரியவர் பண்புள்ள மனிதர்களோடு நல்லதோர் உறவை வைத்திருந்தார் பொல்லாதவர்களை அவர் அறவே தவிர்த்தார். இது பற்றி அவருக்குத் தெரிந்தவர் அவரிடம், “ நல்லவர்களோடு உறவு வைத்திருப்பது நல்லதுதான். அதற்காகப் பொல்லாதவர்களை அறவே தவிர்க்க வேண்டாமே! அவர்களுடைய உதவி எப்போதாவது உங்களுக்குத் தேவைப்படுமே!” என்றார். பெரியவர் அவரை மேலிருந்து கீழ்வரை ஒரு வினாடி கூர்ந்து பார்த்தார். பின்னர் அவர் தனக்குத் தெரிந்தவரிடம், “ நல்ல பண்புள்ளவர்களோடு நாம் பழகினால், அவர்களிடம் இருக்கும் நல்ல பண்புகள் நம்மிலும் வளரும். பின்னாளில் அதற்குக் கடவுள் நல்ல கைம்மாறு தரு– வார். அற்ப குணமுடையவர்களோடு பழகினால், அவர்களிடம் இருக்கும் தீய பண்புகளும் நம்மைத் தொற்றிக் கொள்ளும். முடிவில் கடவுளிடமிருந்து நாம் தண்டனையைத் தான் பெற வேண்டி வரும். அதனால்தான் நல்ல பண்புள்ளவர்களோடு பழகுகின்றேன்” என்றார். ஆம், நாம் நற்பண்புகளோடு வாழும்போது அதற்குரிய கைம்மாறினைப் பெறுவோம். இன்று நாம் வாசிக்கக்கேட்ட முதல் வாசகம், தூய வாழ்விற்குக் கைம்மாறு உண்டு என்கிறது. அது குறித்து நாம் சிந்திப்போம்.

**திருவிவிலியப் பின்னணி:**

சாலமோனின் ஞான நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம், இறைப்பற்றில்லாதவர்கள், இறைவன்மீது பற்றுக்கொண்டு வாழ்ந்த மனிதருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வது பற்றிப் பேசுகின்றது. இறைவன்மீது பற்றுக் கொண்டவர் அல்லது இறையடியார் இறைப்பற்றில்லாதவர்கள் செய்த தீச்செயல்களையும் பாவங்களையும் கடிந்துகொண்டார். இதனால் இறைப்பற்றில்லாதவர்கள் இறையடியாரைக் கொல்ல முடிவு செய்கின்றார்கள். இவர்கள் தூய வாழ்வுக்குக் கைம்மாறு உண்டு மாசற்றவருக்குப் பரிசு கிடைக்கும் என்பதை மறந்து போனதுதான் வேதனையானது.

நற்செய்தியில் யூதர்கள், இயேசு உண்மையில் எங்கிருந்து வந்தவர்கள், அவர் யார் என்பதையெல்லாம் அறியாமல், அவரது வெளித்தோற்றத்தை மட்டுமே பார்த்து, அவரை மதிப்பிடுகின்றார்கள், அவரைக் கொல்லவும் துணிகிறார்கள். அப்போதுதான் இயேசு, “ என்னை அனுப்பியவர் உண்மையா னவர். நான் அவரிடமிருந்து வருகிறேன்” என்கிறார். இயேசு கடவுளிடமிருந்து வந்து, கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி யதால், கடவுள் அவருக்கு எப்பெயருக்கும் மேலான பெயரை அருளினார் (பிலி 2:9). எனவே, நாம் கடவுளின் அன்பு மக்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் நிரூபித்து, அவர் அளிக்கும் கைம்மாறினைப் பெறுவோம். ******

# திரு அவைச் செய்திகள்

“ புனித வாரத்தில்
நீங்கள் விரும்பியதைச் சாப்பிடுங்கள், தியாகம் வயிற்றில் இல்லை, இதயத்தில் உள்ளது. மக்கள் இறைச்சி சாப்பிடுவதைத் தவிர்ப்பார்கள், ஆனால் அவர்கள் தங்கள் உடன்பிறந்தவர்களிடமோ அல்லது உறவினர்களிடமோ பேசுவதில்லை,

அவர்கள் தங்கள் பெற்றோரைப் பார்ப்பதில்லை, தங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில்லை. அவர்கள் தங்கள் உணவை மிகவும் தேவைப்படுபவர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை, தங்கள் குழந்தைகளை தங்கள் தந்தை தாய் மற்றும் அல்லது தாத்தா பாட்டிகளிடமிருந்து விலக்கி வைக்கிறார்கள்,

மற்றவர்களின் வாழ்க்கையை விமர்சிக்கிறார்கள், தங்கள் துணையை மோசமாக நடத்துகிறார்கள். மீன் துண்டு உங்களை ஒரு துறவியாக மாற்றாதது. அது போல இறைச்சி உங்களை ஒரு கெட்ட நபராக மாற்றாது. மற்றவர்களுக்கு



நல்லது செய்வதன் மூலம் கடவுளுடன் நல்ல உறவைத் தேடுவது நல்லது. நாம் குறைவான ஆணவத்துடனும், மனத்தாழ்மையுடனும் இருப்போம்.”
போப் பிரான்சிஸ்

## போப் லியோ XIV, மூளைப் புற்றுநோய்

போப் லியோ XIV, மூளைப் புற்றுநோயின் மிகவும் தீவிரமான வடிவமான கிளியோபிளாஸ்டோமா நிலை IV இருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்ததை அடுத்து, அவரது வாழ்க்கையில் ஒரு பெரிய சோதனையை எதிர்கொள்கிறார் என்று கூறப்படுகிறது.

இந்த செய்தி உலகெங்கிலும் உள்ள பல விசுவாசிகளை மிகவும் கவலையடையச் செய்துள்ளது. இந்த கடினமான நேரத்தில் பரிசுத்த தந்தைக்கு வலிமை, குணப்படுத்துதல் மற்றும் அமைதியை வழங்க பலர் கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறார்கள். தயவுசெய்து ஜெபத்தில் சேர்ந்து அவருக்கு அன்பையும் ஆதரவையும் அனுப்புங்கள். கடவுளின் ஒளியும் கிருபையும் போப் லியோ XIV உடன் இருக்கட்டும்.




## அமைதியை நாடுமாறு உலகத் தலைவர்களுக்குத் திருத்தந்தை அழைப்பு !

காஸ்தல் கந்தோல்போவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக இறைவேண்டல் செய்யுமாறும், நல்லெண்ணம் கொண்ட மக்களை அமைதியின் தூதுவர்களாக செயல்படுமாறும், உலகத் தலைவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்பி, இடம் பெற்றுக் கொண்டிருக்கும் மோதல்களுக்கு அமைதியான தீர்வுகளைக் காணுமாறும் மசர்ச் 31, செவ்வாயன்று மாலை, அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் கருத்துக்களை குறிப்பாகச் சுட்டிக்காட்டி, மத்திய கிழக்கில் வன்முறை மற்றும் பதட்டங்களைக் குறைப்பதற்கான முயற்சிகள் நிச்சயம் பலனளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார் திருத்தந்தை.

இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா துன்பம் மற்றும் மரணத்திற்கான நேரமாக இல்லாமல், சிந்தனை மற்றும் அமைதிக்கான நேரமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி, மீண்டும் போர்நிறுத்தத்திற்கான தனது வேண்டுகோளை விடுத்தார் திருத்தந்தை.

அப்பாவிப் பொதுமக்கள், குறிப்பாகக் குழந்தைகள் மீது போர் தொடர்ந்து ஏற்படுத்தும் தாக்கத்தை கண்டித்ததோடு, தொடரும் மனிதத் துன்பங்களை மக்கள் குறிப்பாக, கிறிஸ்தவர்கள் அங்கீகரித்து அதற்குப் பதிலளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

விசுவாசத்தின் குறியீட்டு முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில், வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுடன் ஒன்றிப்பைக் காட்டும் ஓர் அடையாளமாக, புனித வெள்ளியன்று உரோமை கொலோசியத்தில் நடைபெறும் சிலுவைப் பாதையின்போது தாமே சிலுவையைச் சுமக்கப் போவதாக அறிவித்தார் திருத்தந்தை.

மேலும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக இறைவேண்டல் செய்யுமாறு ஊக்குவித்து, நல்லெண்ணம் கொண்ட மக்கள் அனைவரும் அமைதியின் தூதுவர்களாக செயல்படுமாறு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

## ஆயர் திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு




அனுராதபுரம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக, கடந்த வருடம் திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களால் நியமனம்பெற்ற அருட்தந்தை நிஸாந்த சாகர ஜெயமான்ன அவர்களின் ஆயர் திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு மாசி மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை இன்று நடைபெற்றது.

ஆயர் பேரருட்தந்தை நொபேட் அந்த்ராடி அவர்களின் தலைமையில் அனுராதபுரம் புனித சூசையப்பர் பேராலயத்தில் இடம்பெற்ற இத்திருச்சடங்கில் பதுளை மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் பேரருட்தந்தை வின்ஸ்ரன் பெர்னான்டோ, காலி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை றேமன்ட் விக்ரமசிங்க, மல்கம் கருதினால் ரஞ்சித், கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித், மொன்சிஞ்ஞோர் ராபர்தோ லுச்சினி, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல், யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம், மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம், ஓய்வுநிலை ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னான்டோ, இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அன்ரன் வைமன் குருஸ், ஏனைய மறைமாவட்ட ஆயர்கள், அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் இறைமக்களென பலரும் கலந்துசெபித்தனர்.

இன்றைய தினம் புதிய ஆயராக அபிஷேகம் செய்யப்பட்ட பேரருட்தந்தை நிஸாந்த சாகர ஜெயமான்ன அவர்கள் தனது மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திலும் மெய்யியலில் முதுமானிப்பட்ட படிப்பை இத்தாலி உரோமாபுரியில் அமைந்துள்ள ஆஞ்சலிக்கும் பல்கலைக்கழகத்திலும் பயின்று 2000ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டடார். இவர் நற்கருணைநாதர் சபை நிதியாளர் மற்றும் முதல்வராகவும் மாத்தளை புனித தோமையார் ஆலயம் மற்றும் புனித பிலிப்பிநேரியார் ஆலய பதில் பங்குத்தந்தையாகவும், உதவி நவசன்னியாச அதிபராகவும், கங்வெல்ல நவசன்னியாச அதிபராகவும், பெற்றா குழுமத்தின் நிதியாளராகவும் கங்வெல்ல எய்மாட் கம்பெல் ஆன்மீக பயிற்சி இல்ல இயக்குநராகவும், கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல் பாட விரிவுரையாளராகவும், கண்டி அம்பிடிய நற்கருணைநாதர் சபை குருமடத்தின் அதிபராகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். மறைமாவட்ட ஆயரின் சுற்றுமடல்

### தவக்காலம்

அருட்கொடைகளின் காலமாகிய தவக்காலத்தின் நாற்பது நாட்களையும் மன மாற்றத்தைத் தேடும் நாட்களாகப் பயன்படுத்தி இறை நம்பிக்கையைப் புதுப்பித்து,. இறைவேண்டல், பரித்தியாகங்கள் வழியாக இறைவனுடன் நெருங்கி வாழ்வோமென யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் வெளியிட்டுள்ள தவக்கால சுற்றுமடலில் அழைப்புவிடுத்துள்ளார்.

தவக்காலத்தில் நாம் மேற்கொள்ளும் நோன்புகளும் ஏனைய தவமுயற்சிகளும் எம்மை சூழவுள்ள ஏழைகள் துயருறுவோருக்கு வாழ்வுகொடுத்து இறைவனுடன் எம்மை இணைக்கவேண்டுமென பதுடன் நாம் இத்தவக்காலத்தில் எம்மைவிட தாழ்நிலையிலுள்ளோரை தேடிச்சென்று உதவ முன்னவரவேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளர்.

அத்துடன், யாழ். மறைமாவட்டத்தில் சமூக தொடர்பு ஆண்டாக கடைப்பிடிக்கப்படும் இவ்வாண்டின் தவக்காலத்தில், நாம் சமூகத் தொடர்பு சாதனங்களைப் பொறுப்புடன் மனித நேயத்தை மதித்து, உறவுகளைக் கட்டியெழுப்ப பயன்படுத்தப் பழகுவதுடன், திரை நேரத்தை மட்டுப்படுத்தி, அந்நேரத்தை தவக்கால பக்திமுயற்சிகளை மேற்கொள்ள பயன்படுத்துவதுடன் அதனை எம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதையும் சிறப்பான பரித்தியாகமாக கடைப்பிடிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் எமது பிரதேசத்தில் இளையோரை இலக்கு வைத்து போதைப் பொருட்களை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக குறிப்பிட்ட ஆயர் அவர்கள் நாம் பொறுப்புள்ள விதத்தில் இத்தீமைகளுக்கு அடிமையானோருக்கு மறுவாழ்வும், விற்பனையில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்தவும் எமது ஒத்துழைப்பை வழங்கி, ஆவன செய்யவேண்டுமெனவும் எடுத்துரைத்துள்ளார்.



## திரு விவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட தித்திக்கும் திருக்குறள் அதிகாரம் - 4

**அதிகாரம் 4 – அறன் வலியுறுத்தல் – குறள்**

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்



**பொருள்**

பொறாமை, பேராசை, பெருங்கோபம், கடுஞ்சொல் ஆகிய நால்வகை குற்றமும் இல்லாமல் செயல்படுவதே உண்மையான அறம் எனப்படும். பிறர் வளர்ச்சி கண்டு பொறாமை, அதன் காரணமாக ஏற்படும் ஆசை, அதனால் வரும் கோபம். போபத்தால் வரும் கடுஞ்சொல், சங்கிலி போலத் தொடர்ந்து வரும். இக்குற்றங்கள் நான்குமே மனதை மாசுபடுத்து. இவையின்றி செயல்படுவதே அறம்.

பொறாமை, பேராசை, பெரும் கோபம், கடுஞ்சொல் இவை அனைத்துமே இல்லாதவர்களை வேதாகமத்தில் தொடக்கநூலிலேயே காண்கின்றோம். தொடக்க நூலில் ஆபிரகாம் தனது மனைவியிடமும், அவருடைய சகோதரனிடமும், வேலைக்காரர்களிடமும் அவர் கோபம் கொண்டதாக நாம் வாசித்திருக்கமாட்டோம். தன் மகன் ஈசாக்கைப் பலி கொடுக்க ஆண்டவர் கட்டளையிட்ட போதும், அவர், ஆண்டவரே ஏன் எனக்கு இந்த நிலை? எனது வயதான காலத்தில் எனக்குப் பிறந்த என் பிள்ளையை நான் எவ்வாறு பலியிட முடியும்? என்று வாதாடவோ, போப்படவோ இல்லை. மிகுந்த பொறுமையுடன் ஆண்டவருக்கு முற்றிலுமாக கீழ்படிந்து நடந்தார். தன் சகோதரன் லோத்துக்குப் பிள்ளைகள் இருக்கின்றனர். ஆனால் தனக்குப் பிள்ளைகள் இல்லை என்று பொறாமைப் படவோ, பேராசை கொள்ளவோ, பணியாளர்களிடம் பெரும் கோபம் கொள்ளவோ, கடுஞ்சொல் பேசவோ இல்லை.

சோதோம், கொமாரா பட்டணங்கள் பாவத்தினால் அழிந்துவிடாதபடிக்கு அவர்களின் பாவ மன்னிப்புக்காக ஆண்டவரிடம் மன்றாடினார். இதை நாம் தொடக்க நூல் 18 ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். அவ்வளவு பொறுமையாக நிதானமாக ஆண்டவரிடம் அவர் மக்களுக்காக மன்றாடுகின்றர்...பரிந்து பேசுகின்றார்.

அடுத்ததாக அவரது மகன் ஈசாக்கு...ஈசாக்கும் ஆண்டவருக்குப் பயந்து நடந்தவர். பொறுமை உள்ளவர். கோபம் கொள்ளாதவர். ஈசாக்கு பஞ்சத்தின் காரணமாக கெரார என்ற ஊருக்குச் செல்கிறார். அந்த இடத்தில், அவரை ஆண்டவர் பஞ்ச காலத்திலும் நூறு மடங்காக ஆசீர்வதிக்கின்றார். அதனால், அபிமெலக்கு என்ற அரசன் நீ எங்களைவிட வலிமை உள்ளவனாய் இருப்பதால் எங்களை விட்டு அகன்று போ என்கிறான் உடனே அவர் எதுவும் பேசாமல் அந்த இடத்திலிருந்து சென்றுவிடுகின்றார். அடுத்ததாக அவர் ஒரு பள்ளத்தாக்கில் மூடப்பட்ட கிணறுகளைத் தோண்டி எடுக்க, பின் அந்த இடத்தில் நீர் படுகையில் அவர் தோண்ட அங்கே பொங்கி எழும் நீரூற்றைக் கண்டார். ஆனால் கெராரில் இருந்து மேய்ப்பவர்கள் ஈசாக்கின் மேய்ப்பவர்களோடு இந்தத் தண்ணீர் எங்களது என்று வாதாடுகின்றார்கள்...............

இவ்வாறு அவர்கள் வாதாடியதால் அவர்களிடம் அதை விட்டுவிட்டு வேறு ஒரு கிணறைத் தோண்டுகின்றார். முன்புபோல அதைப்பற்றியும் வாக்குவாதம் ஏற்பட்டதால், அவர் அந்த இடத்தையும் விட்டு அகன்று வேறு ஒரு கிணற்றைத் தோண்டுகிறார். அதில் எந்த வாக்குவாதமு ஏற்படாமல் இருந்ததால் ஆண்டவர் எல்லையை விரிவுபடுத்தினார் நாட்டில் நாம் வளர்ச்சியுறுவோம் என்று சொல்லி அதற்கு இரகபோத்து என்று பெயரிடுகிறார்.

இவ்வாறு வாக்குவாதம் செய்தவர்களிடம் சண்டையிடாமல், கடினப் பணி செய்தும். பொறுமையாக அவர் அந்த இடத்தைவிட்டு செல்வது சிறந்த அறச்செயலாகும். (தொடக்கநூல் 26ஃ12–22)

இதையெல்லாம் நன்று அறிந்த திருவள்ளுவர் நற்குணங்களைப்பற்றி நமக்கு இவ்வாறு எடுத்துரைக்கிறார். நாமும் நம் வாழவில் அறச் செயல்களைச் செய்கிறோமோ? அதில் நிலைத்து நிற்கிறோமா? என்று சிந்திப்போம்.

இயேசுவுக்கே மகிமை. **– லீமா விக்டோரியா**

## குருவிக்கு கடன் பட்ட காகம்!



அது ஒரு கொடிய கோடை காலம். வெயில் மண்டையை பிளக்கும் உச்சி நேரம். பாவம்..! ஒரு அண்டங்காக்கை. அதற்கு அப்படி ஒரு தாகமோ தாகம். தொண்டை உலர்ந்து போயி கரைய முடியவில்லை. அங்கும் இங்கும் அலைந்து தண்ணியைத் தேடியது. ஒரு சிறிய மண் குடம் கண்ணில் பட்டது. அதனுள் ஆழத்தில் இருந்தது ஜலம். அதை எப்படி குடிப்பது என்று தவித்தது காகம். காக்கை அன்று செய்தது போல செய்யலாம் என எண்ணி கற்களைத் தேடியது. கற்கள் ஒன்று கூட இன்று காணவில்லை. தாகத்தால் தவிக்கும் காக்கையை குருவி ஒன்று பார்த்தது. எங்கிருந்தோ ஒரு ஸ்ட்ராவை கொண்டு வந்தது. அதை வச்சு தண்ணியை உறிஞ்சி குடிச்சு காகம் தாகத்திலிருந்து பொழச்சது.

"உனக்கு நான் கடன் பட்டிருக்கேன். நீ என் தாகம் தீர வழி காட்டினாய். இல்லையென்றால், நான் நிச்சயமாய் பரலோகம் போயிருப்பேன். எனக்கு நீ இத்தனை பெரிய உதவி செய்திருக்கே. இதை நான் மறக்க மாட்டேன் என் இனிய குருவி" என்று தன் இரு ரெக்கைகளையும் ஒன்றாக குவிச்சு, நன்றி சொல்லி விடை பெற்றது காகம்.

நமது வலிமையாகிய கடவுளை மகிழ்ந்து பாடுங்கள். (தி,பா: 81:1)

# கலிலேயாவிலிருந்தா மெசியா வருவார்?



அந்தக் கோயிலில் இருந்த பெரிய ஆர்மோனியத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார் கோயிலில் வழக்கமாக ஆர்மோனியம் வாசிக்கும் இளைஞர்.

தற்செயலாகக் கோயிலுக்குள் நுழைந்த ஒருவர் ஆர்மோனியம் வாசித்துக் கொண்டிருந்த அந்த இளைஞர் அருகில் வந்து, “ சிறிது நேரம் நான் இந்த ஆர்மோனியத்தை வாசிக்கலாமா?” என்று கேட்டார். இளைஞர் அந்த மனிதரை மேலிருந்து கீழ்வரை பார்த்தார். அவர் உடுத்தியிருந்த ஆடை ஆங்காங்கே கிழிந்திருந்தது. தலை வாரப்படவில்லை தாடி மழிக்கப்படாமல், நீண்டு வளர்ந்திருந்தது. எல்லாவற்றையும் பார்த்துவிட்டு இளைஞர் அந்த மனிதரிடம் “ முடியாது” என்று மறுத்தார்.

வந்தவர் மீண்டும் மீண்டுமாகக் கேட்டார். இதனால் அவருடைய தொல்லை தாங்க முடியாமல் இளைஞர் அவரை ஆர்மோனியத்தை வாசிக்க அனுமதித்தார்.

இதையடுத்து அந்த ‘ அழுக்கு மனிதர்’ ஆர்மோனியத்தின் முன்பு அமர்ந்து வாசிக்கத் தொடங்கினார். ஆர்மோனியத்தில் அவரது விரல்களை நடனமாடுவதையும், அதிலிருந்து மிக அற்புதமான இசை வழிந்தோடுவதையும் பார்த்துவிட்டு இளைஞர் மெய்ம்மறந்து நின்றார். ‘ அழுக்கு மனிதர்’ ஆர்மோனியத்தை வாசித்து முடித்ததும் இளைஞர் அவரிடம், “ ஐயா நீங்கள் யார், உங்களுடைய பெயர் என்ன?’ என்று கேட்டதற்கு, அவர், “ பெலிக்ஸ் மெண்டல்சன் என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து வேகமாக நகர்ந்தார்.

ஜெர்மனியைச் சேர்ந்த மிகப்பெரிய இசைக் கலைஞர் பெலிக்ஸ் மெண்டல்சன். அவரது அருமை தெரியாமல், அவரது வெளித்தோற்றத்தைப் பார்த்து இளைஞர் அவரை உதாசீனப்படுத்தியது எவ்வளவு வேதனையான செயல்! நற்செய்தியில், கலிலேயாவிலிருந்து மெசியா வருவாரா? என்று சொல்லி இயேசுவைப் புறக்கணிப்பதைக் குறித்து வாசிக்கின்றோம். அது பற்றி நாம் சிந்திப்போம்.

**திருவிவிலியப் பின்னணி:**

நான் தந்தையிடமிருந்து வந்தவன் என்று இயேசு சொன்னதைத் தொடர்ந்து, ஒருசிலர், “ வரவேண்டிய இறைவாக்கினர் இவர்தான் ” என்றும், “ மெசியா இவர்தான்” என்றும் அவரை ஏற்றுகொள்கின்றனர். வேறு சிலரோ, “ கலிலேயாவிலிருந்தா மெசியா வருவார்?” என்று அவரை ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றார்கள்.

யூதர்களைப் பொறுத்தளவில் பிறவினத்தார் மிகுதியாக வாழ்ந்த கலிலேயாவிலிருந்து நல்லது எதுவும் வராது, இறைவாக்கினர் யாரும் தோன்றியதில்லை என்ற எண்ணம் இருந்தது. ஆனால், இயேசுவை அடையாளபடுத்தும் இறைவாக்கினர் யோனா கலிலேயாவிலிருந்துதான் வந்தவர் என்பதை அவர்கள் வசதியாக மறந்து போனார்கள். இந்நிலையில்தான் பரிசேயர் தலைவர்களில் ஒருவரான நிக்கதேம், “ ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது, அவர் என்ன செய்தாரென்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமா?” என்று கேட்கின்றார். உண்மையில் இயேசுவுக்கு நடந்ததும் இதுதான். பரிசேயர்கள் இயேசுவின் வாக்குமூலத்தைக் கேளாமல், அவர் என்ன செய்தார் என்று அறியாமல் அவருக்குத் தீர்ப்பளித்தார்கள்.

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எரேமியாவிற்கு எதிராக அவரது சொந்த ஊர் மக்களே சூழ்ச்சி செய்கின்றார். இதனால் அவர் அவர்களிடமிருந்து தன்னை விடுவிக்குமாறு கடவுளிடம் மன்றாடுகின்றார்.

மக்கள் இயேசுவுக்கு எதிராகவும், இறைவாக்கினர் எரேமியாவிற்கு எதிராகவும் தீர்ப்பிட்டாலும், கடவுள் அவர்களோடு உடனிருந்தார் என்பதுதான் உண்மை. எனவே, நாம் மக்களிடமிருந்து வரும் எதிர்ப்புகள், புறக்கணிப்புகளைக் கண்டு கலங்காமல், தொடர்ந்து,. இறையாட்சிப் பணியைச் செய்வோம்.

**சிந்தனைக்கு:**

தீர விசாரிக்காமல் எதையும் ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

ஆண்டவருடைய அடியார்களை ஆண்டவர் உடனிருந்து காத்திடுவார்

தீர்ப்பிடும் அதிகாரம் கடவுளுக்கு மட்டுமே உள்ளது என்பதால் யாரையும் தீர்ப்பிடாது இருப்போம்.

**இறைவாக்கு:**

‘ பிறருக்கு எதிராகத் தீர்ப்பளிக்கும்போது நீங்கள் உங்களுக்கே தண்டனைத் தீர்ப்பை அளிக்கிறீர்கள்’ (உரோ 2:1) என்பார் புனித பவுல். எனவே, நாம் யாரையும் தீர்ப்பிடாது, மற்றவரைப் பற்றி நல்லவிதமாய்ப் பேசி, இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

# திருக்கெழுத்து புதிர் 92

**11 குறிப்பேடு 18-36**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | 5 | | | 6 |
| | | | 7 | | | 8 | | 9 | |
| | | 10 | | | | | | 11 | |
| | 12 | | | 13 | 14 | | 15 | | |
| 16 | | | 17 | | | | | 18 | |
| | 19 | | 20 | | 21 | | | | 22 |
| | | | 23 | 24 | | | | | 25 |
| | 26 | 27 | | | 28 | 29 | | | |
| 30 | | | 31 | 32 | | | 33 | | |
| 34 | 35 | 36 | | | 37 | 38 | | 39 | 40 |

**இடமிருந்து வலம்**

1. நம் மடவுளாகிய ஆண்டவரிடம் ............இல்லை
5. பொறுப்பை..........அவன் குடும்பத்தில் யாரும் இல்லை.
7. அவன்.............யோபாத்தின் அரசனானான்.
15..................அரசனின் மைந்தர்.
16..........நாடுகளின் அரசுகள் அனைத்தையும் ஆள்பவர்.
17..............ப் பயணம் தடைபட்டது.
19. படைத் திரளைப் பார்த்த................
20. அவன் தாயின் கொடு...........யே ககாரணம்.
21............தாளம் தம்புரு சுரமண்டலம்.
24.................வின் மகன் அப்தோன்.
27. லெபனோனின் நெருஞ்சிச் ............
29. சகோதரர்.............என்பவர்...நியமிக்கப்பட்ட..
30. தான் செதுக்கிய ஒரு............வைத்தான்.
32. கொடுத்து வாருங்கள் என்று.........ங்கள்.
34..............தனது நெருக்கடியாலும்....துரோகம் செய்தான்.
36. அது ஒரு..........யாக
38............ஏன் கட்டிக்காமல் இருக்கின்றீர்.

**வலமிருந்து இடம்**

3..............என்று கத்தினார்கள்.
4.............கேகட்டறிவதற்கு இங்கே.....யாருமில்லை.
7. எகிப்திய..........நெக்கோ
9. இவர்களுக்குத்................இல்லை.
11............பலிகளின் கொழுப்பும்
12. ஆண்டவரின் பார்வையில்..............யானதைச் செய்.
15. தாவீதின்...........கருவிகளுடனும்
19. மாறுவேடத்தில்..........க்குச் சென்றான்.
21. சிறைக்.............இங்கே கொண்டுவர வேண்டாம்.
23. எருசலேம் முழுவதும்..............கொண்டாடின.
24. அவர்கள்.............வெற்றி பெற்றான்.
25. தாவீது நகரில்...........என்று கோட்டையை வலுப்படுத்தினார்.
28. தெய்வங்களுக்கு துாபம்...............ளார்கள்.
31......................செப்பனிட்டு செம்மைப்படுத்துமாறு
33. சகோதரர்கள்................நீங்கள் இருக்கவேண்டாம்.
37. உங்களையே.............க்கிக் கொள்ளுங்கள்.
40. மக்களுக்கு.............கட்டளையிட்டார்.

**மேலிருந்து கீழ்**

1. நீங்கள் கண்ணாரக் கண்டீர்கள்..............
3. எமகிதோ............யால் அவனோடு போரிடச் சென்றார்.
4. இன்று .......உமக்கெதிராய்ப் படையெடுத்து வரவில்லை.
6..............அவன் இஸ்ராயேல் அரசர்களின் வழியாய்
8. மாலை..............போரிட்டான்.
10. ஆகாசு அரசனானபோது அவனுக்கு வயது ..........
13. பெத்கமேசில் நேருக்கு .............மோதினர்.
15. உம்.............தற்பெருமை கொண்டு எழுகின்றது.
17..............நாடு முழுவதற்கும் மடல் வரைந்து..
18. அவனை...............வெட்டி வீழ்த்தினார்.
19. நாட்டின் வழியே.............நீர் அவர்களை அனுமதிக்கவில்லை.
25............ந்த மகிழ்ச்சி உண்டாயிற்று.
26. திருச்சட்ட.............க் கண்டெடுத்தேன்.
27. மக்களோ இறைவாக்கினர்களுக்குச்........... கொடுக்க வில்லை.
33. உசியாவுக்குப்...........த்திறனுடைய படை ஒன்று இருந்தது.

**கீழிருந்து மேல்**

12. ஆண்டவரின் பார்வையில் அவன்............செய்தான்.
13. ஆண்டவரின் பார்வையில் .............யன செய்தார்.
14............கையில் ஆண்டவர் ஒப்படைத்தார்.
15. அரசப் பொறுப்பை ஏற்க அவன் குடும்பத்தில்யாருமே...
22. சிறைப்படுத்தியோரிடமிருந்து..............ம் பெற்று
30. நான் கொண்ட..............கனன்று எரியும்.
34. ஆண்டவர் தம் மக்களுக்கு............வழங்கியுள்ளார்.
35. ..................யும் மாலையும் செலுத்தவேண்டிய
39. தாவீதின்.............லே நின்று நெறிமுறை வழுவாது ஒழுகினர்.
40. நீர்மப் படையல்களும்..............இருந்தன.

**உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி ஆண்டவரே, எங்கள் இதயத்தை திறந்தருளும்.**

## விவிலிய அறிவுப்போட்டி - 92




1.“உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கப்படும் நாட்டிற்குப் போக யோர்தானைக் கடந்த பின்பு பெரிய கற்களையாட்டி சாந்து பூசுவாய்” யாரால் யாருக்கு கூறப்பட்டது.?

2. எதனை ஒருவனுக்கு கொடுக்காதநிலையில் அவன் ஆண்டவரை நோக்கி முறையிடுவான். அது உனக்கு பாவமாக அமையும் என்று கூறப்படுகிறது?

3. ஆண்டவர் மோயிசனுக்கு கட்டளையிட்டதன்படி மோயிசன் இஸ்ராயேலருக்கு தம்மோடு எந்த அரசர்கள் போர் புரியப் புறப்பட்டார்கள் என்று கூறியிருந்தார்.?

4. லேவி புதல்வர்களாகிய குருக்கள் கொல்லப்பட்டவன் அருகில் வந்து பள்ளத்தாக்கிலே எதன் மீது தங்கள் கைகளைக் கழுவுகின்றனர்?

5. இரவில் வரும் கெட்ட கனவினாலே தீட்டுப்பட்ட ஒருவன் இருந்தால் அவன் எப்போது பாளையத்துக்கு வரக்கடவான் என்று கூறப்படுகின்றது.?

6. இஸ்ராயேல் பெண்களிடம் கன்னிமை காணப்படவில்லை என்றால். மதிகெட்ட அக்கிரமஞ் செய்தான்என்று அந்நகரமக்கள் அவனை எவ்வாறு கொல்லப்படவில்லை என்று கூறப்படுகிறது?

7.“இஸ்ராயேலே கவனித்துக் கேட்பாயாக நீ இன்று உன் கடவுளாகிய ஆண்டவருடைய இனமானாய்” என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

8. கடை வீரர்கள் பலவீனப்பட்டு நின்றுகொண்டிருந்ததை கண்டு கடவுளுக்கு அஞ்சாமல் அவர்களை வெட்டி வீழ்த்தியவர் யார்?

9. மோயிசன் யோர்தானைக் கடந்த பின்பு மக்களுக்கு ஆசீர் அளிக்குமாறு பெஞ்சமின் கோத்திரத்தார் சிமையோன், லேவி, யூதர் எந்த மலையில் நிற்பார்கள் என்று கூறுகின்றார்?

10. தன் தாய் தந்தையரை மதித்து நடவாதவன் மேல் சாபம் என்பதோடு மக்களின் பதில் என்ன?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் ~ 91
### உப ஆகமம் 11-20

1. உருச்சிதையும், பழுதுள்ள ஆட்டு மாட்டையும் பலியிட்டால் .
2. சாபம் – உப. ஆ 11:28
3. கருக்கு வாளினால் –உப. ஆ– 20:17
4. இஸ்ராயேல் மக்களுடன் – உப. ஆ – 18:1
5. வந்த வழியாய் ஒருக்காலும் திரும்பிப் போகக்கூடாது என்று. உப . ஆ – 17:16
6. ஊரான் கையிலும், உறவினா் கையிலும் உப. ஆ – 15:3
7. லேவியன் – உ. ஆ 18:8
8. தானியத்தையும், கொடிமுந்திரிப்பழச்சாற்றையம், எண்ணையையும், புல்லையும் உ. ஆ –11:14
9. இரண்டு அல்லது மூன்று –உ. ஆ – 17:6
10. உடலை வெட்ட வேண்டாம், தலைமயிரை சவரம் செய்ய வேண்டாம்.

## விவிலிய பொது அறிவுப்போட்டி 91
### பரிசு பெறுபவர்கள்
### உப ஆகமம் 1~10

**பரிசு பெறுபவர்கள்**

1. **திருமதி:** லோறன்ஸ் அன்ரனி யசிந்தா.
2. **திருமதி:** ஜெறாட் ஜெயா.

**ஏனையவர்கள்:**

திருமதி: ஜேசுதாசன் மேரி யொய்சி.
திருமதி : ஜெனற் தேவசகாயம்.
திருமதி: பிறிம்றோஸ் தேவசகாயம்
திருமதி: M.N.மரிய செல்வநாயகம்.
திருமதி: இலக்கியராஜ்டயானி.
திருமதி: ரஞ்சிதம் அன்ரனி.
திருமதி: நிர்மலா அக்கா
திருமதி: நந்தா ஜெயம்.
திருமதி: றீற்ரா செல்வரெட்ணம்.
திருமதி: ஜோசவ் கெலன் அன்னவதி
திருமதி: இமெல்டா பெர்நாந்..
திருமதி: மல்லிகா ஜெராட்.
திருமதி: பேணாட் றணா.

## புதிர் தோட்டம் 97

1. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன் நீரைக் கண்டு பதை பதைக்கிறான் அவன் யார்?

2. மேலிலும் துவாரம், கீழிலும் துவாரம், வலதிலும் துவாரம், இடதிலும் துவாரம், உள்ளிலும் துவாரம், வெளியிலும் துவாரம்இருந்தும் நீரை என்னில் சேமித்து காப்பேன் நான் யார்?

3. கடலில் கலக்காத நீர், எவரும் குடிக்காத நீர் அது என்ன?

4. தொட்டுப்பார்க்கலாம் எட்டிப்பார்க்க முடியாது. அது என்ன?

5. அடித்தாலும் உதைத்தாலும் அவன் அழமாட்டான். அவன் யார்?

6. எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல் அது என்ன?

7. ஓடுவான் வருவான் ஒற்றைக்காலில் நிற்பான் அவன் யார்?

8. புளிப்பான் மீனுக்கு உப்பு போதவில்லையாம் பூட்டி வைத்த ஜாடிக்குள் உப்பில் நீந்துதாம். அது என்ன?

9. ஊரெல்லாம் மூடியிருக்கும்,
ஊறகாய் பானை திறந்திருக்கும் அது என்ன?

10. ஆற்றில் விழுந்தாலும் ஆழ்கடலில் விழுந்தாலும் எரிந்து கொண்டே இருப்பான் அவன் யார்?

## புதிர் தோட்ட விடைகள் 96

| | | |
|---|---|---|
| 1. தென்னை மரம்<br>2. சேவல்<br>3. உப்பு<br>4. கடிதம் | 5. நிலா<br>6. கண், மூக்கு<br>7. கோலம் | 8. கத்தரிக்காய்<br>9. சோளக்கதிர்<br>10. நிழல் |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 91

## லேவியர் நூல் 1-20

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

1ம் பரிசு: திருமதி –இலக்கியராஜ்–டயானி.

2ம் பரிசு: திருமதி–பேணாட்–றணா.

3ம் பரிசு: திருமதி–ஜேசுதாசன். மேரி யொய்சி

### ஏனையவர்கள்

4– திருமதி–யோசவ் கெவின் அன்னவதி.

5– திருமதி–டடிஸ் லோஸ்–யோகமலர்.

6– திரு–அருளப்பு கிறிஸ்டியன்.

7– திருமதி–ஜெயா–ஜெராட்.

8– திருமதி–ஜெனற்–தேவசகாயம்.

9– திருமதி–வேஜினியா ஜேசுதாசன்.

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலம்**

1. ஆரோன் – 8:30
2. திருநிலைப் – 8:12
3. தமக்கு – 8:4
5. ஒரு — 13:40
6. மாறாக –10:9
7. காகம் – 11:15
12. ஊற்று 15:13
15. கழுகு 11:13
16. குருவி 14:53
17. தலைமுறை 10:9
18. குருதி 14:14
19. தன் 14:16
20. தேன் 2:11
21. கட்டை 1:17
22. பாவம் 5:6
23. சிறு 3:4
25. தூயது 7:6
28. ஆரோனும்

**வலமிருந்து இடம்**

2. திருமுன் 7:30
8. பாவம் 16:5
11. கைகளை 8:22
13. தேமல் 13:39
14. நியம 10 :9
17. தம் 11:25
19. தலைமேல் 3:13
27. நீக்கம் 12:08
29. தன் 14:17

**மேலிருந்து கீழ்**

1. ஆடு 7:23
2. திராட்சை 10:9
5. ஒத்தே 15 :26
7. காலால் 11:42
8. பாகை 8:9
11. கைநிறைய 9:17
18. குற்றம் 14:12
24. ஆணை 15:4

**கீழிருந்து மேல்**

4. குரு 6:10
5. ஒரு 10 :14
6. மலை 11:31
9. பாவக் 16:17
10. கொக்கு 11:19
12. ஊர் 7:24
16. குற்றம் 14:12
19. தலை 13:44
26. ஆடிய 3:9
27. நீங்கள் 14:34

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 98

1 ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பவர் யார்?

2 இயேசு கிறிஸ்துவின் அம்மா பெயர் என்ன?

3 இயேசு தம்முடைய சீஷர்களாக எத்தனை பேரை தம்மிடம் அழைத்தார்?

4 சவுலும் யோனத்தானும் எந்த எவைகளை பார்க்கிலும் வேகமுள்ளவர்கள்?

5 ஜலத்தின் மேல் நடக்க ஆசைப்பட்டவன் யார்?

6 யாருடைய கொம்பு உயர்த்தப்படும்?

7 உம்முடைய ———— என மனமகிழ்ச்சி ?

8 ரபீ என்பதன் பொருள் என்ன?

9 மெசியா என்பதன் அர்த்தம் என்ன?

10 சலமோனின் தகப்பன் பெயர் என்ன?

## உறவுகள் 97க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1. கடவுள் தம் உருவில் மனிதரைப் படைத்தார் (ஆதி:1:27)
2. காயீன்
3. கடவுள் ( ஆதி:1)
4. உடன் படிக்கையின் அடையாளம் எது? ( ஆதி: 9,3)
5. மனைவியின் பெயர் சாராய் - மகனின் பெயர் ஈசாக்கு( ஆதி:12:5 21:3)
6. கடவுள் (ஆதி: 1)
7. காகம் ஒன்றை (ஆதி:8:6)
8. கானான் நாட்டிற்கு ( ஆதி:12:5)
9. கோபர் மரத்தால் ( ஆதி:6ஒ14)
10. 175 ஆண்டுகள் ( ஆதி:25:7)

# பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**1வது பிரிவு: 07-02-2026 {9 :30- 17:00}**
**08-02-2026 {9 :30- 17:00}**

**திருமண அருட்சாதன வகுப்பு,**
**பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்**
**இரு அமர்விலும் முக்கியம் கலந்து கொள்ளவும்**



**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**வளர்ந்தோருக்கான**
**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**சித்தி:** புதன் 22ந் திகதி -சனி 26ந் திகதி 17:30-18:30
**வைகா:** புதன் 28ந் திகதி -சனி 30ந் திகதி 17:30-18:30
**ஆனி:** புதன் 24ந் திகதி - சனி 27ந் திகதி 17:30-18:30

baptêmes

**சிறுவர்களுக்கான**
**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

**சித்தி:** புதன் 22ந் திகதி -சனி 26ந் திகதி 18:00-19:30
**வைகா:** புதன் 28ந் திகதி -சனி 30ந் திகதி 18:00-19:30
**ஆனி:** புதன் 24ந் திகதி - சனி 27ந் திகதி 18:00-19:30

**இவ் வகுப்புக்கு பெற்றோர், ஞானப் பெற்றோரின் வருகை முக்கியம்**

## துணிவே துணை

ஜூலியஸ் சீசர் போல ரோமப்பேரரசராக உயர வேண்டுமா? அல்லது உங்களுக்குள்ளேயே சிறைப்பட்ட ஒரு பறவையாக வாழ வேண்டுமா? என்பது உங்களின் துணிச்சலைப் பொறுத்தே அமையும். இந்த இரண்டு முடிவுகளும், வெற்றிகளும் உங்களுக்குள்ளேயேதான் இருக்கிறது. எதைத் தேர்வு செய்து தன்முனைப்புடன் உங்களை நீங்களே வழி நடத்திச் செல்கிறீர்களோ, அது போலவே நீங்கள் எண்ணியது போலவே உருவாகி விடுவீர்கள். துணிச்சலுடன் உயர்ந்த இலட்சியங்களை அடைய எப்பொழுதும் முன்னோக்கியே செல்லுங்கள். –ஸர் டி.ப்ரெளன்

## வெற்றிக்கு முதல்படி எது?

மாபெரும் செயல்களைச் செயல் வகையில் செய்து முடிக்க உறுதி எடுக்க வேண்டும் என்றால், உங்களுக்கு இன்றியமையாத முதல் மூலப் பொருளான, வெற்றிக்குத் தேவையான முதல் கூறான தன்னம்பிக்கை நெஞ்சில் பொங்கி வழிய வேண்டும். தடைகளையும், அவமதிப்புகளையும், தன்னம்பிக்கைதான் சமாளித்து அடித்துத் துரத்தி பொன்னாக நம்மை உருவாக்கும். நேர் வழி பாதுக்காப்பானது என்பதை உணர்த்தும். தன்னம்பிக்கையுடன், செயல்படுங்கள் அனைத்தையும் துணிச்சல்தான் சாதிக்கும்.

## ஆடி- பணியகத் திருப்பலிகள்

**05- 07-2026 - புனித பேதுறு பாவுலு திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

**19- 07-2026 - புனித அன்னம்மாள் திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**26-07-2026 - புனித யாகப்பர் திருவிழா**
15:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

## ஆவணி - பணியகத் திருப்பலிகள்




**தூய கன்னி மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா 15-08-2026**
10:00 - Notre Dame de France
95560 - Baillet en France (வயல் மாதா)

## புரட்டாதி - பணியகத் திருப்பலிகள்

**06- 09-2026 புனித குழந்தை தெரேசம்மாள் திருவிழா**
17 :00 Chapelle ND de Lourdes Combs la ville

**01- 09-2026 புனித அடைக்கலமாதா திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations -75011-Paris

**13- 09-2026 புனித கன்னிமரியாளின் பிறப்பு திருவிழா - Paris பணித்தளவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**20- 09-2026 அதிதூதர் தூய மிக்கேல் திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**27- 09-2026 அன்னை வேளாங்கன்னி திருவிழா**
**Sevran -பணித்தளம்**
17:00 - Eglise St Martin – Sevran



**27- 09-2026 மருதமடு அன்னை திருவிழா**
14:30 - Chapelle Notre Dame des Ange - Clichy

# பாஸ்கா திரியில் கவனிக்கத் தவறிய 8 அடையாளங்கள்.

**1) சிலுவை அடையாளம் :–**

பாஸ்கா திரியின் மையத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் சிலுவை, இயேசு மனுக்குலத்தை மீட்கும் பொருட்டு ஏற்றுக்கொண்ட மரணத் தைக் குறிக்கிறது திரியில் காணப்படும் முதல் அடை யாளம்.

**2) ஐந்து உருண்டைகள் :–**

சாம்பிராணி போன்ற நறுமணப் பொருட்களால் உருவாக்கப்படும் ஐந்து உருண்டைகள் பாஸ்கா திரியில் உள்ள சிலுவையின் மீதும் அதன் சுற்றிலும் பொருத்தப்படுகின்றன. இயேசுவின் இரு கைகள், திருப்பதாங்கள், மற்றும் விலா வின் ஈட்டியால் ஏற்பட்ட ஐந்து காயங்களையும் குறிக்கின்றன. ஒவ்வொரு உருண்டையின் நறுமணமும், இயேசுவின் தியாகம் கடவுளுக்கு எவ்வளவு உகந்ததோ அவ்வளவு நறுமணம் உள்ளது என்பதை நினைவூட்டுகின்றது பாஸ்கா திரியின் இரண்டாம் அடை யாளம்.




**3) கிரேக்க எழுத்துக்கள் :–**

பாஸ்தா திரியில் சிலுவைக்கு மேலும் கீழும் கிரேக்க எழுத்துக்கள். அல்பா மற்றும் ஒமேக்கா பொறிக்கப்படுகின்றன.

அல்பா என்பது கிரேக்க எழுத்துக்களின் முதல் எழுத்து ஒமேக்கா கடைசி எழுத்து. மரணத்தை வென்ற இயேசு காலத்தின் ஆரம்பமும் முடிவும் அவரே. அவரிடமிருந்து தொடங்கி அவரிடமே முடிக்க வேண்டுமென்பதை அறிவுறுத்துகின்றது. பாஸ்கா திரியின் 3வது அடையாளம்.

**4) வருட எண் :–**

பாஸ்கா திரியில் நடப்பு வருடத்தின் எண். உதாரணமாக 2026 பொறிக்கப்படுகின்றது. இதன் ஆழமான பொருள் காலங்கள் அவருடையது. யூகங்கள் அவருடையது என்பதாகும். இயேசு வரலாற்றின் நடுநாயகமும் கி.மு மற்றும் கி.பி என்ற பிரிவே இயேசுவை மையமாகக் கொண்டது. 2026ம் ஆண்டு அவரது ஆட்சியின் ஒரு பகுதியே என்பதை நினைவுபடுத்துகின்றது நான்காவது அடையாளம்.

**5) புதிய நெருப்பு:–**

பாஸ்தா இரவில் ஆலயத்திற்கு வெளியே புதிய நெருப்பு மூட்டப்படுகின்றது. அதிலிருந்துதான் பாஸ்கா திரி பற்ற வைக்கப்படுகின்றது. புதிய நெருப்பிலிருந்து பாஸ்கா திரி யை பற்ற வைப்பது. அதிலிருந்து விசுவாசிகளின் சிறு மெழுகு–திரிகளை ஏற்றுவர். ஒவ்வொரு விசுவாசிகள் உயிர் த்த இயேசுவின் ஒளியைப் பெற்று உலகில் பிரதிபலிக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது ஐந்தாவது அடை–யாளம்.

**6) சில திரிகள் :–** இயேசுவின் பெயரின் அடையாளமான IHS என்பதும், கிறிஸ்து என்பதன் அடை யாளமான குறியீடுகள் ஓீ என்பதும் பொறிக்கப்பட்டிருக்கும். இயேசுக் கிறிஸ்து உலகின் ஒளி என்பதாகும்.

**7) முள் கீரீடம் :–**

சில திரிகளின் அடிப்பகுதியில் முள் கிரீடத்தின் சிலுவை பொறிக்கப்படும். இயேசு மனுக்குலத்திற்காக பட்ட நிந்தைகளையும், அவமானத்தையும் நினைவுபடுத்துகின்றது ஏழாவது அடையாளம்.

**8) பாஸ்காதிரி:–**

பொதுவாக வெண்மெழுகு, தேன்மெழுகுகளால் ஆனது. ஆனால் அதன் மீதுள்ள அடையாளங்கள் சிவப்பு அல்லது பொன் நிறத்தில் இடப்படும். சிவப்பு நிறம் இயேசுவின் தியாகத்தைக் குறிக்கின்றது. பொன்நிறம் இயேசுவின் மகிமையான உயிர்த்தெழுதலைக் குறிக்கின்றது.